

# இலங்கைக்கான தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கை



வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு

# இலங்கைக்கான
# தேசியத் தொழிலாளர்
# புலம்பெயர்வுக் கொள்கை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும்
நலனோம்புகை அமைச்சு

தேசியக் கொள்கையின் அபிவிருத்தி
ஆதரவு

சர்வதேச தொழில் அலுவலகம், கொழும்பு

ஒக்டோபர் 2008

# முன்னுரை

இலங்கை கடந்த இரண்டு தசாப்தங்களில் புலம்பெயர் எண்ணிக்கையில் பத்து மடங்கு அதிகரிப்பைக் கண்டுள்ளது. மேலும் சுமார் 200,000 ஆட்களின் வருடாந்த வெளிப்பாய்வைக் கொண்டதாகப் பத்து இலட்சத்துக்கும் கூடிய புலம்பெயர்ந்தோர் வெளிநாட்டில் வேலை செய்கின்றனரென நடப்பு மதிப்பீடுகள் கூறுகின்றன. கடந்த பல ஆண்டுகளாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பண அனுப்பீடுகளின் கணிசமான உட்பாய்வுகளை உருவாக்கியுள்ளதுடன் உள்நாட்டுத் தொழிலின்மை அழுத்தங்களின் கடுமையைக் குறைத்து, விசேடமாகப் பெண்களுக்குத் தொழில்வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது.

பொருளாதாரத்துக்கும் சமுதாயத்துக்கும் கடல்கடந்த தொழிலுக்கான புலம்பெயர்வின் தொடர்கின்ற முக்கியத்துவத்தின் பொருட்டு, புதிதாக உருவாக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு தொழிலாளர் புலம்பெயர்வுக்கான அதன் நீண்டகாலத் தொலைநோக்கையும் இலக்குகளையும் ஈடுபாட்டுக் கடப்பாட்டையும் தெளிவாகக் கூறுவதற்கு முன்னுரிமைக் கவனம் செலுத்தியுள்ளது.

தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை விரிவுபடுத்துதல் பல்வேறு காரணங்களின் நிமித்தம் தற்போதைய கவனத்துக்குரியதும் காலப்பொருத்தமானதுமாகும். கடல்கடந்த வேலைவாய்ப்புக்கான நிறுவனம் சார்ந்த, சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தும் அடிப்படைக் கட்டமைப்பு விருத்திசெய்யப்பட்ட 1980களின் நடுப்பகுதியின் பின்னர் முக்கியமான பொருளாதார சமூக மற்றும் அரசியல் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இவை பொருளாதாரத்தின் மீது உலகமயமாக்கல் போக்குகளின் தாக்கம், புலம்பெயரும் எண்ணிக்கையில் துரிதமான வளர்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய வடுப்படுநிலை, பாதுகாப்பு மற்றும் நலனோம்புகைப் பிரச்சினைகள், புலம்பெயர்வின் அதிகரித்த பெண்மயமாக்கம், புலம்பெயர்வின் சமூக தாற்பரியங்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் தொடர்பான சர்வதேச சாதனங்களின்பால் இலங்கையின் ஈடுபாட்டுக் கடப்பாடு என்பவை தொடர்பானவை. இலங்கை எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகளின் பாதுகாப்புப் பற்றிய சர்வதேச சமவாயத்தை 1995 இல் உறுதிப்படுத்தியது. அது ‘ஐ.எல்.ஓ’ முக்கிய சமவாயங்கள் எல்லாவற்றையும் இப்போது உறுதிப்படுத்தியுள்ளதுடன் தேசியக் கொள்கையின் விரிவுபடுத்தலுக்கு உறுதியானதோர் அத்திவாரமாகத் தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய ‘ஐ.எல்.ஓ’ பலதரப்புச் சட்டகத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் பத்தாண்டுக் காட்சி எல்லை அபிவிருத்திச் சட்டகமும் (2006-2016) ஏற்புடைய வேலைக்கான தேசிய செயல்திட்டமும் பொருளாதாரத்துக்குத் தொழிலாளர் புலம்பெயர்வின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டுள்ளன. புலம்பெயர்வையும் அபிவிருத்தி இணைப்புக்களையும் ஊக்குவிப்பதற்கான உலகளாவிய அடியெடுப்புக்களுடன் இலங்கையும் இணைந்துள்ளது.

இச் சூழமைவில்தான் எனது அமைச்சு சர்வதேச தொழில் அலுவலகத்தின் (ஐ.எல்.ஓ) தொழில்நுட்ப உதவியுடன் தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை விருத்தி செய்யத் தீர்மானித்தது. இங்கு விரிவாகக் கூறப்பட்டுள்ள தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையானது தென்னாசியப் பிராந்தியத்துக்கான தனித்துவமானதும் முன்னோடியானதுமான ஓர் அடியெடுப்பைக் குறிக்கின்றதாக, மேற்படி வளர்ச்சிகளுக்கு ஆராய்ந்து முடிவுசெய்யப்பட்ட ஒரு பதிலளிப்பாகும். அது எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் சுதந்திரமும் கௌரவமும் பாதுகாப்பும் ஒப்புரவும் கொண்ட நிலைமைகளின் கீழ் ஏற்புடையதும் பயனுள்ளதுமான தொழிலுக்காகப் புலம்பெயர்வில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை முன்னேற்றுவதற்காகச் சர்வதேச சாதனங்களில் போற்றிப் பேணப்படும் நல்லாட்சியும் உரிமைகளும் பொறுப்புகளும் பற்றிய கோட்பாடுகளைப் பின்பற்றுகின்ற தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறையொன்றை உறுதிப்படுத்துவதற்கான அரசின் ஈடுபாட்டுக் கடப்பாட்டைத் தெளிவுபடக் கூறுகின்றது. இக்கொள்கை ஆவணம் அக்கறையுள்ள பங்கீடுபாட்டாளர்கள் - பொருத்தமான அரசாங்க அமைச்சுக்களும் முகவர் நிறுவனங்களும், தொழில்வழங்குனர் மற்றும் தொழிலாளர் அமைப்புக்கள், புலம்பெயர்வோர் சங்கங்கள், சிவில் சமுதாயம் மற்றும் தொடர்புடைய சர்வதேச முகவர் நிறுவனங்கள் - எல்லோர் மத்தியிலும் நடத்தப்பட்ட ஒரு விரிவான கலந்தாலோசனைச் செயல்முறையினூடாக உருவாக்கப்பட்டுள்ளது. இத் தேசியக் கொள்கை அரசாங்கத்தின் கொள்கைக் கடப்பாடுகளை வகுத்துரைப்பதுடன் கலந்தாலோசனைச் செயல்முறையின்போது பங்கீடு பாட்டாளர்கள் அனைவராலும் அடையாளம் காணப்பட்ட சவால்களையும் கொள்கைப் பதிலளிப்புகளையும் விரித்துக் கூறுகின்றது. மேலும் இக்கொள்கை, எழுந்துள்ள முக்கிய கொள்கைச் சவால்களிலும் பிரச்சினைகளிலும் கவனஞ்செலுத்துகின்ற விரிவான வேலைத் திட்டமொன்றைக் கொண்டுள்ளது.

எனது தலைமைப் பொறுப்பின் கீழ் ஒரு முத்தரப்பு வழிப்படுத்தும் குழு (மு.வ.கு) தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை வகுப்பதற்குப் பொறுப்பாயிருந்தது. மு.வ.கு. கொள்கையின் விரிவாக்கத்துக்கு ஆட்சிமுறை, புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பும் வலுவளிப்பும், புலம்பெயர்வும் அபிவிருத்தியும் ஆகிய மூன்று முக்கிய கவனக்குவிப்புப் பரப்புகளை அடையாளம் கண்டது. அது இப்பரப்புகள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடத்தக்க அனுபவமும் ஈடுபாடுமுள்ள பங்கீடுபாட்டாளர்களைக் கொண்ட மூன்று செயல் அணிகளை நியமித்தது. இம் மூன்று செயலணிகளின் கலந்தாராய்வுகளின் அடிப்படையில் மு.வ.குழுவின் ஒட்டுமொத்த வழிகாட்டலின் கீழ் தேசியக் கொள்கை விருத்திசெய்யப்பட்டது. இவ்வரைவுக் கொள்கை பின்னர் எல்லா மாகாணங்களையும் சேர்ந்த பேராளர்கள் அடங்கிய பரந்த அடிப்படையிலான தேசியக் கலந்தாலோசனையொன்றில் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்கத் திருத்தப்பட்டது. செயலணிகளின் உறுப்பினர்கள், மு.வ.கு., தேசிய ஆலோசகர்கள் மற்றும் ‘ஐ.எல்.ஓ’ என்பவை வழங்கிய பெருமதிப்பு வாய்ந்த பங்களிப்புகள் எல்லாவற்றுக்கும் எனது அமைச்சு அதன் பாராட்டுதலை எழுத்தில் பொறிக்க விழைகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதில் மகிழ்ச்சியடைகின்றது. இச் செயல்முறையில் முக்கிய பங்கீடுபாட்டாளர்கள் அனைவரினதும் தீர்வுகட்டப் பங்குகளையும் பொறுப்புக்களையும் ஒப்புக்கொள்கின்ற எனது அமைச்சு, கடல் கடந்த தொழிலைத் தேடுகின்ற எல்லா இலங்கைப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கௌரவம், பாதுகாப்பு மற்றும் ஒப்புரவு ஆகிய நிலைமைகளின் கீழ் புலம்பெயர்வை உறுதிப்படுத்துவதற்கு அவர்களின் பூரண ஒத்துழைப்பை நம்பியுள்ளது. மேலும் அமைச்சு கொள்கையின் அமுலாக்கச் செயல்முறையைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான பல பங்கீடுபாட்டாளர் பொறிமுறையொன்றை உறுதிப்படுத்துவதற்கும் அதனைத் தானே ஈடுபடுத்திக்கொண்டுள்ளது.



கெஹெலிய ரம்புக்வெல்ல, பா.உ.
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும்
நலனோம்புகை அமைச்சர்
தவிசாளர், முத்தரப்பு வழிப்படுத்தும் குழு,
தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கை.

ஒக்டோபர் 2008
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு
கொழும்பு - 1.

# நன்றிக் கணிப்புக்கள்


காலப்பொருத்தமான முறையில் இலங்கைக்கான தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையின் அபிவிருத்தியானது அரசாங்க மற்றும் தனியார்துறை நிறுவனங்கள், தொழில்வழங்குனர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல்வேறு தனிப்பட்டவர்களின் அன்பான உதவியினதும் ஒத்துழைப்பினதும் மூலம் சாத்தியமாக்கப்பட்டது.

இச் செயல்முறையை வழிப்படுத்துவதில் அவரின் ஈடுபாட்டுக்கும் தலைமைத்துவத்துக்கும் கௌரவ அமைச்சர் கலா. கெஹெலிய ரம்புக்வெல்ல அவர்களுக்கும் நான் நன்றியுடையவனாவேன். இத் தேசியக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்த தமது அனுபவங்களையும் சிறப்பறிவையும் நுண்ணறிவுத் திறன்களையும் பகிர்ந்து கொள்வதில் தமது விலைமதிக்க முடியாத நேரத்தை வழங்கிய முத்தரப்பு வழிப்படுத்தும் குழு உறுப்பினர்களும் செயற்குழுக்களின் உறுப்பினர்களும் ஆற்றிய பங்களிப்புகளை நான் நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ள விரும்புகின்றேன்.

தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை வகுப்பதில் சர்வதேச தொழில் அலுவலம் வழங்கிய தொழில்நுட்ப மற்றும் நிதியாதரவை நான் நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்கின்றேன். ஐ.எல்.ஓ. கொழும்பு அலுவலகப் பணிப்பாளர், ரைன் ஸ்ரேர்மோஸ் அவர்களுக்கும், ஐ.எல்.ஓ. கொழும்பு அலுவலக நிகழ்ச்சித்திட்ட அலுவலர் பிரமோதினி வீரசேகர அவர்களுக்கும், ஐ.எல்.ஓ. ஜெனீவா, புலம்பெயர்வு பற்றிய சிரேஷ்ட சிறப்புத்துறையாளர் கலா. பியசிறி விக்கிரமசேகர அவர்களுக்கும் இக்கொள்கையை வகுக்கின்ற செயல்முறை பூராவும் அவர்களின் வழிகாட்டலுக்கும் உதவிக்கும் தொழில்நுட்ப உள்ளீடுகளுக்கும் எனது விசேட நன்றிகளை நான் எழுத்தில் பொறிக்க விரும்புகின்றேன்.

ரமணி ஜயசுந்தர அவர்களுக்கு, தேசிய தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை வகுப்பதற்கான செயல்முறை முகாமையாளர் என்ற கோதாவில் இச்செயல்முறை பூராவும் அவரின் பங்களிப்புக்கும் ஈடுபாட்டுக்கும் அர்ப்பணிப்புக்கும், செயல்முறையில் உதவியதற்காக லக்மாலி தசநாயக்க அவர்களுக்கும் நான் நன்றியுடையவனாவேன். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை (SPARC) சேர்ந்த பேராசிரியர் சிறி ஹெட்டிகே மற்றும் கலா. மார்கஸ் மேயர் ஆகிய இரு ஆலோசகர்களும் ஆற்றிய பெருமதிப்புள்ள பங்களிப்பையும் நான் நன்றியதலுடன் ஒப்புக்கொள்கின்றேன்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தையும் சேர்ந்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவருக்கும் அவர்களின் பங்களிப்புக்கும் விலைமதிக்க முடியாத நுண்ணறிவுத் திறன்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.



சுனில் எல். சிறிசேன
செயலாளர்,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை
அமைச்சு

ஒக்டோபர் 2008
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு
கொழும்பு - 1

# நிறைவேற்றுச் சுருக்கம்

தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய இலங்கைத் தேசியக் கொள்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சினால் விருத்திசெய்யப்பட்டுள்ளது. அதன் குறிக்கோள் ஏனைய நாடுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரசைகள் தொடர்பான அரச கொள்கையைத் தெளிவுபடக் கூறுதலும் அந்நியச் செலாவணி அனுப்பீடுகள் மற்றும் வேறு பொறிமுறைகள் ஊடாகத் தேசியப் பொருளாதாரத்துக்கு இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர் அனைவரும் ஆற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஒப்புக்கொள்ளுதலுமாகும். இக்கொள்கை பொருளாதாரத்தில் தொழிலாளர் புலம்பெயர்வின் பங்கு தொடர்பில் நீண்டகாலத் தொலைநோக்கொன்றை விருத்திசெய்தல், பொருளாதாரம், சமுதாயம், புலம்பெயர் தொழிலாளர்கள், அவர்களின் குடும்பங்கள் ஆகியவற்றின் மீது தொழிலாளர் புலம்பெயர்வின் நன்மைகளை மேம்படுத்துதல், அதன் பாதகமான தாக்கங்களை இழிவளவாக்குதல், இறுதியாக புலம்பெயர் தொழிலாளர்களின் எல்லா மனித உரிமைகளும் தொழில் உரிமைகளும் நிறைவேற்றப்படுதலையும் பாதுகாக்கப்படுதலையும் நோக்கிப் பணியாற்றுதல் ஆகிய இலக்குகளைக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் இலங்கை, தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறையில் ஆட்சிமுறை, புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பும் நலனோம்புகையும் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும் வகைதுறை ஏற்பாடுகளையும் தாபித்துள்ளது. பெரிதும் குறிப்பிடத்தக்கதாக, புலம்பெயர்வில் ஆர்வமுள்ளவர்களுக்குச் சேவைகளையும் ஒழுங்குபடுத்தும் சட்டகமொன்றையும் வழங்குகின்ற இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியம் (SLBFE) 1997 முதல் தாபிக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில் இது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சின் (MFEPW) கருத்தெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த அடியெடுப்புகள் ஏற்புடைய தொழில், தொழிலின் மதிப்பு மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் எல்லா மனித உரிமைகளினதும் சுதந்திரங்களினதும் பாதுகாப்பு என்ற கோட்பாட்டுச் சட்டகத்தினுள் தொழிற்படுகின்றன. இந்த அடியெடுப்புகளின் மத்தியிலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை ஆபத்தானதும் பாதுகாப்பற்றதுமான நிலைமைகளின் கீழ் புலம்பெயர்கின்ற தொழிலாளரின் வடுப்படும் நிலை, தொகைகுறைந்த அனுப்பீடுகள் விஞ்சிமேம்படுதல், பிரதானமாகப் பெண்களுக்குத் திறன் குறைந்த வேலைகளும் அதன் விளைவாக அவர்களின் குடும்பங்களுக்குப் பாரிய சமூக இழப்புகளும் போன்ற பல்வேறு சவால்களைத் தொடர்ந்தும் எதிர்நோக்குகின்றது. எனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவித்தலுக்கும் வெளிநாட்டிலுள்ள தேசியத் தொழிலாளரைப் பாதுகாத்தலுக்கும் இடையில் நுண்ணிய சமநிலையைப் பேணுதலென்பது தொடர்ச்சியான ஒரு சவாலாகியுள்ளது. இன்றைய தேசியக் கொள்கை இதிலும் ஏனைய சவால்களிலும் கவனஞ்செலுத்தக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் இத் தேசியக் கொள்கை, எல்லா ஆண்களும் பெண்களும் சுதந்திரம், ஒப்புரவு, பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் என்ற நிலைமைகளின் கீழ் ஏற்புடையதும் பயனுள்ளதுமான தொழிலுக்காகப் புலம்பெயர்வில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் நோக்கைக் கொண்டுள்ளது. இதனைப் புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்குமான கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்கு விதிகள், சேவைகள் மற்றும் வசதிகள் என்பவற்றைத் தாபிப்பதன் ஊடாகச் செய்வதற்கு உத்தேசிக்கப் படுகின்றது. புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்புக்குப் பிரதானமானதும் பயனுறுதியுள்ளதுமான ஒரு வழிமுறையாகத் தேர்ச்சித் திறன்களின் அபிவிருத்திக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இக்கொள்கை புலம்பெயர்வுச் செயல்முறையின் ஆட்சிமுறை, புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பும் வலுவளிப்பும், புலம்பெயர்வையும் அபிவிருத்திச் செயல்முறைகளையும் இணைத்தல் என்ற மூன்று பிரிவுகளாக விருத்திசெய்யப்பட்டுள்ளது. மேலதிகமாகக் கொள்கை விருத்தி செய்யப்பட்ட விரிவான சட்டகத்தையும் கலந்தாலோசனைச் செயல் முறையையும் ஆறு பின்னிணைப்புகள் விவரிக்கின்றன.

முதலாவது பிரிவில் தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கு நல்ல ஆட்சிமுறை இன்றியமையாததெனக் கண்டுணரப்படுகின்றது. அது செயல்விளைவுள்ள நிறுவனங்களையும் ஒழுங்கு விதிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. நல்ல ஆட்சிமுறையானது மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் பங்கேற்பை ஊக்குவிக்கவும் ஒப்புரவான சமூக, பொருளாதார விளைவுகளைச் சாதிக்கவும் வேண்டும். பங்கேற்பு, ஒளிவுமறைவின்மை, வகைப்பொறுப்பு என்பவை நல்ல ஆட்சிமுறையின் முக்கிய ஆக்கக்

கூறுகள். நிறுவனம் சார்ந்த சட்டகம், சட்டவாக்கச் சட்டகம், ஒழுங்குபடுத்தும் சட்டகமும் சமூக உரையாடலும் மற்றும் கலந்தாலோசனைச் சட்டகம் ஆகிய நான்கு முக்கிய பரப்புகள் ஆழ்ந்து ஆராயப்படவேண்டியுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலநோம்புகை அமைச்சு நிறுவனம் சார்ந்த சட்டகத்தைத் தாபிக்கின்றது. ஏனைய முக்கிய நிறுவனங்கள் அதன் குறைநிரப்புகின்றன. நடப்புக் கொள்கையின் ஏற்பாடுகளின் கீழ் தற்போதுள்ள தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறைகளை மீளாய்வு செய்வதற்கும் தேவையானவிடத்து கூட்டுழைப்பை வசதிப்படுத்துவதற்குமெனத் தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய ஆலோசனைக் குழுவொன்றும் அமைச்சுகளுக்கிடையிலான இணைப்புக் குழுவொன்றும் தாபிக்கப்படவுள்ளன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஒழுங்குபடுத்தும் பங்கு ஒப்புக் கொள்ளப்படுவதுடன் மேலும் வலுப்படுத்தப்படவுமுள்ளது. குறிப்பாக ஆட்சேர்ப்புக்கான தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்பட வுள்ளதுடன் ஆட்சேர்ப்புச் செயல்முறையும் கூடிய உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட வுள்ளது. ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு உயர் நடத்தைத் தரங்கள் விதிக்கப்படுவதுடன் தவறுகளில் கவனஞ்செலுத்துவதற்குத் தண்டனை ஏற்பாடுகளும் முன்வைக்கப்படுகின்றன. அதேயளவு முக்கியமானதாக ஏற்றுக் கொள்ளும் நாடுகளிலுள்ள இராஜதந்திரத் தூதரகங்களின் பங்கும் செயலாற்றல்களும் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் வழிகாட்டல் தேவைகளை நிறைவேற்றக் கூடியனவாக, பயிற்சிக்கான வளங்களின் ஒதுக்கீடு, சேவைகளில் கூடிய உள்ளடக்கம், பொருத்தமான வசதிகளின் தாபிதம் என்பவற்றினூடாக வலுப்படுத்தப்படவுள்ளன.

சட்டவாக்கச் சட்டகம் புலம்பெயர்வு பற்றித் தற்போதுள்ள தேசிய மற்றும் சர்வதேசச் சட்டத்துக்கு இணங்கியதாக்கப்படவுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள சட்டமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம் மீளாய்வு செய்யப்பட்டு ஏதேனும் இடைவெளிகளை நிரப்புவதற்குத் திருத்தங்கள் முன்மொழியப்படும். இலங்கை எல்லாப் புலம் பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்புப் பற்றிய சர்வதேச சமவாயத்திலும் வேறும் அநேக சர்வதேச சமவாயங்களிலும் சட்டகங்களிலும் கையொப்பமிட்ட ஒரு தரப்பாயுள்ளது. எனவே இக்கடப்பாடுகள், பொருத்தமானவிடத்து சட்டவாக்க நடவடிக்கைகள் ஊடாக நிறைவேற்றப்படுதலை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் கண்காணிக்கப்படும் ஒழுங்குபடுத்தும் சட்டகம், எல்லாப் பிரஜைகளுக்கும் தேர்ச்சித் திறன் அபிவிருத்திக்கான எளிதில் அணுகக் கூடிய ஒப்புரவான வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதலையும் அதன் மூலம் தேர்ச்சித் திறனுள்ள தொழிலாளர் புலம்பெயர்வை ஊக்குவித்தலையும் உள்ளடக்குகின்றது. புலம் பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற கடல் கடந்த தொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதில் கவனஞ் செலுத்தப்படும். இது குறிப்பாகத் தேர்ச்சித்திறன் குறைந்த தொழிலாளர்களுக்குத் தேர்ச்சித்திறன்களை வழங்குதல், புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நியாயமான, போதிய ஊதியத்தை உறுதிப்படுத்துதல், துஷ்பிரயோகம், மீறல் மற்றும் சுரண்டல் பிரச்சினைகளில் கவனஞ்செலுத்துதல், மனித வன்கடத்தல் பிரச்சினைகளைத் தடுத்தலும் சீர்ப்படுத்தலும் என்பனவற்றினூடாகச் சாதிக்கப்படும். இறுதியாக புலம் பெயர் தொழிலாளர்களின் பங்குபற்றலையும் கலந்தாலோசனையையும் நோக்கி அவர்களின் வாக்களிக்கும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இரண்டாவது பிரிவு புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பும் வலுவளிப்பும் தொடர்பானது. அரசு புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்புக்கான அடிப்படைப் பொறுப்பைக் கொண்டுள்ளதென்ற வகையில் புலம் பெயர்வுச் செயல்முறையின் மூன்று கட்டங்களிலும் புலம்பெயர்தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு வலுவளிப்பதற்கும் பொறுப்பேற்கின்றது. இக்கட்டங்களாவன:- புறப்படுகைக்கு முன்னர் (தீர்மானம் செய்வதிலிருந்து பயிற்சிக்கும் அதிலிருந்து புலம்பெயர்வுக்கான ஆயத்தத்துக்கும்), சேவைக்காலம் (தொழிலாளர் வேலையிலும் குடும்பங்கள் இங்கு விடப்பட்டும்) மற்றும் திரும்பிவரலும் மீளஒன்றிணைதலும் (மீள ஒன்றிணைதலுக்கும் ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கும் பாராட்டப்படுதலுக்குமான கவனத்துடன்). குறிப்பாக அரசு, புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும்பொருட்டு அவர்களின் தோற்றப்பாட்டுக்கான குறைந்தபட்சத் தேவைகளை விதிப்பதற்கும் புலம்பெயரும் வாய்ப்புள்ள தொழிலாளர்கள் வேலைக்காகப் புலம்பெயர்வதற்கு அறிவூட்டப்பட்ட, ஆழ்ந்து ஆராய்ந்த முடிவுகளை எடுக்கக்கூடியதான சூழலொன்றை விருத்தி செய்வதற்கும், ஒழுங்கற்ற கெடுவழக்கான ஆட்சேர்ப்புச் செயல்

முறைகளை மேலும் இழிவளவாக்குவதற்கும், புலம்பெயர் தொழிலாளர்களை உளவியல் ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் ஆயத்தப்படுத்துவதற்கும் பயிற்றுவிப்பதற்கும் குறிப்பிடத்தக்க ஏற்பாடுகளை வழங்குவதற்கும் பொறுப்பேற்கும். இது உளவியல் மற்றும் பொதுச் சுகாதார ஆலோசனையையும் ஆதரவையும் உள்ளடக்குகின்றது. ஏற்றுக் கொள்ளும் அல்லது ஆதரவளிக்கும் நாடுகளிலுள்ள இராஜதந்திரத் தூதரகங்கள் புலம் பெயர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான அவற்றின் கடமைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதுடன் தேவையுள்ள எல்லாத் தொழிலாளர்களும் பாதுகாப்பாகத் தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுதலை உறுதிப்படுத்தவும் வேண்டும். திரும்பிவரலும் மீளஒன்றிணைதலும் உரிமைகளினதும் சுதந்திரங்களினதும் முழுமையான பாதுகாப்புடன் இடம்பெறுதலை உறுதிப்படுத்தல் தலையாய முக்கியமானது. புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளின் பாதுகாப்பிலும் நலனோம்புகையிலும் அதற்குள்ள பொறுப்பையும் அரசு ஒப்புக் கொள்கின்றது.

புறப்படுகைக்கு முந்திய கட்டத்தில் அரசு வயது, எழுத்தறிவு, தெரிவுசெய்யப்பட்ட வேலை வகுதிகளுக்கான பொருத்தப்பாடு என்பவை தொடர்பில் தொழிலாளர் புலம்பெயர்வுக்குத் தகுதிபெறுவதற்கான குறைந்த பட்சத் தேவைகளைத் தாபிக்கும். தொழிலுக்காகப் புலம் பெயர்தல் தன்னிச்சையான ஒரு முடிவென்பதையும் எல்லாப் பிரஜைகளும் அனுபவிக்கின்ற ஓர் உரிமை என்பதையும் ஒப்புக் கொள்கின்ற அரசு, புலம் பெயரும் வாய்ப்புள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்கள் தொழிலுக்காகப் புலம் பெயரும் முடிவை எடுக்கின்ற செயல்முறையில் உதவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தப்புவழிகாட்டுகின்ற தகவல்கள் பரப்பப்படுதலைத் தடுக்கவும் செய்யும். புலம்பெயர் தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பில் சுரண்டலையும் துஷ்பிரயோகத்தையும் தடுப்பதற்கும் திறமையையும் ஆற்றலையும் முன்னேற்றுவதற்கான பயிற்சி நெறிகளைத் தரமுயர்த்துவதற்கும் கடல் கடந்த பிரயாணத்திற்கும் தொழிலுக்கும் ஆயத்தப்படுத்துவதில் உதவுவதற்கும், புறப்படுகைக்கு முன் தேவையான எல்லா மருத்துவச் சோதனைகளையும் நடத்துவதற்குமான ஏற்பாடுகள் செய்விக்கப்படும். புலம்பெயர்தொழிலாளர்கள் புறப்படுகைக்கு முந்திய உளவளத்துணையையும் கடல் கடந்த நாட்டில் வேலைசெய்வதற்கும் வாழ்வதற்குமான உளவியல் ஆயத்த நிலையையும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாயிருப்பர்.

சேவைக் காலத்தின் போது அரசு புலம்பெயர் தொழிலாளர்களைச் சுரண்டலிலிருந்தும் துஷ்பிரயோகத் திலிருந்தும் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளை வழங்குவதுடன் ஆதரவளிக்கும் நாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திரத் தூதரகங்கள், ஒவ்வொரு நாட்டிலும் புலம்பெயர் தொழிலாளர் அனைவருக்கும் உதவுவதற்கான முறைமைகளையும் சேவைகளையும் போதியளவில் கொண்டிருத்தலையும் அவர்களின் பாதுகாப்பையும் நலனோம்புகையையும் நோக்கி முன்கூட்டிச் செயற்படும் முறையில் பணியாற்றுதலையும் உறுதிப்படுத்தும். புலம்பெயர் தொழிலாளர்களுக்குக் காப்புறுதி, ஓய்வூதியம் மற்றும் நலனோம்புகை அடங்கலாக நன்மைகளையும் சேவைகளையும் வழங்குவதற்கான திட்டமொன்று அரசினால் விருத்திசெய்யப்பட்டு அது எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் கிடைக்கச் செய்யப்படும். ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்கள் மீது ஒப்பந்தப் பொறுப்பையும், சட்டக் கடப்பாட்டையும் சுமத்துவதன் ஊடாகத் தாய் நாட்டுக்குத் திருப்பியனுப்பும் கொள்கை கையாளப்படும். இறுதியாக அரசு பதிவு, கண்காணிப்பு மற்றும் விசேட நன்மைகள் என்பவற்றினூடாகப் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளைப் பாதுகாப் பதற்கான கொள்கைச் சட்டகமொன்றை வகுக்கும்.

திரும்பி வருதலின் பேரில் அரசு புலம்பெயர் தொழிலாளர்களுக்கு திரும்பி வரல் மற்றும் மீளஒன்றிணைத்தல் சேவைகளை வசதிப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை வடிவமைத்துச் செயற்படுத்தும். இது புலம்பெயர் தொழிலாளர்களை உரியமுறையில் அங்கீகரித்தல், சேவைகளுக்கான முன்னுரிமை வாய்ப்பை அனுபவிப்பதற்கு அவர்களை இயலச் செய்தல், விமான நிலையத்தை அடைகையில் விசேட சேவைகள், மீள் ஒன்றிணைப்புக்கான வழிகாட்டலும் திறன்களும், வரிச் சலுகைகள், புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு விசேட நன்மைகள் ஆகியவற்றை உள்ளடக்கும். புலம்பெயர் தொழிலாளர்கள் வெற்றிகரமான மீள் ஒன்றிணைப்புக்கான ஒரு சூழலைப் பயன்படுத்துவதற்கு செயல்விளைவுள்ள மற்றொரு வழிமுறையாக சிவில் சமுதாய நிறுவனங்களையும் தொழிற்சங்கங்களையும் அரசு கண்டுணர்கின்றது.

தேசியக் கொள்கையின் இறுதியானதும் மூன்றாவதுமான பிரிவு வேலைவாய்ப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வருமான உருவாக்கத்துக்கும் தொழிலாளர் புலம்பெயர்வின் பங்களிப்பை ஒப்புக் கொள்கின்றதாக, அபிவிருத்தி மற்றும் புலம்பெயர் செயல்முறைகளை இணைத்தல் தொடர்பானது. திரும்பிய புலம்பெயர்ந்தோரும் தேசிய எல்லைகளைக் கடந்த புலம்பெயர்ந்தோரும் முதலீடுகள், தொழில்நுட்ப

மற்றும் தேர்ச்சித் திறன்களின் கைமாற்றம், மனித மூலதன உருவாக்கம், சமூக மூலதனமேம்பாடு, வர்த்தக மற்றும் வியாபார இணைப்புகளின் ஊக்குவிப்பு மற்றும் நல்ல ஆட்சிமுறை ஆகியவற்றுக்குப் பங்களிக்கின்றனர். நீண்டகால நோக்கில் நீடுறுதியான பொருளாதார வளர்ச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்குமான ஓர் உபாயமாகக் கடல் கடந்த வேலைவாய்ப்பைக் கருத முடியாதென்பதை மனதில் கொள்கின்ற அதேவேளையில் அபிவிருத்திக்குத் தொழிலாளர் புலம் பெயர்வின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அரசு ஒப்புக் கொள்கின்றது. இருப்பினும் அரசு தாயகத்தில் ஏற்புடைய வேலைவாய்ப்புக்களை உருவாக்குகின்றதும் செல்வத்தினதும் அபிவிருத்தி நன்மைகளினதும் ஒப்புரவான பகிர்வை ஊக்குவிக்கின்றதுமான ஈடுபாட்டுக்கடப்பாட்டையும் கொண்டுள்ளது.

இந்நோக்கங்களுக்காகப் புதிய கடல் கடந்த சந்தைகளும் வாய்ப்புக்களும் தேடிக் கண்டுபிடிக்கப்படவும் ஊக்குவிக்கப்படவும் வேண்டும். இது இலங்கையர்களுக்கு இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்புக்களின் ஊக்குவிப்பையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்தும். வெளிநாடுகளில் தொழில் சந்தை மதிப்பீடுகளும் சந்தைப் பகுப்பாய்வுகளும் சந்தை ஊக்குவிப்புத் திட்டங்களும் தோன்றி வருகின்ற வாய்ப்புக்களையும் புதிய கிராக்கிகளையும் உறுதியாக அறிந்து கொள்வதற்கு உதவும்.

மேலும் இலங்கையின் அபிவிருத்தியில் புலம்பெயர்வின் பங்கை வலியுறுத்துவதற்குத் தேசிய அபிவிருத்தி, ஏற்புடைய வேலை, தொழில் சந்தை, வறுமைக் குறைப்புக் கொள்கை ஆகியவற்றுடன் தொழிலாளர் புலம் பெயர்வு ஒருங்கிணைக்கப்பட்டு பெரும்போக்கில் கொண்டுவரப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இது தொழிலாளர் புலம் பெயர்வானது பொருத்தமான கொள்கைச் சட்டகங்கள் எல்லாவற்றுடனும் கூட்டிணைக்கப்படுதலை உறுதிப்படுத்துவதற்கு, ஏனைய தேசிய மற்றும் சர்வதேச முகவர் நிறுவனங்களுடனும் திணைக்களங்களுடனும் சேர்ந்து மேற்கொள்ளப்படும் ஒத்திசைவிக்கப்பட்ட ஒரு முயற்சியாக இருக்கும். தேர்ச்சித் திறனுள்ள தொழிலாளர் புலம்பெயர்வை ஊக்குவித்தல், அபிவிருத்தி மற்றும் புலம்பெயர்வுச் செயல்முறைகளை இணைப்பதற்கு முக்கியமானதாகக் காணப்பட்டுள்ளது. குறிப்பாக ஓர் உயர் கலப்புத் திறன்களின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தலும், வாய்ப்புள்ள புலம்பெயர் தொழிலாளர்கள் தேர்ச்சித் திறனுள்ளவர்களாவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தலும் முக்கியமானதாகக் காணப்பட்டுள்ளது. இதற்கு உலகளாவிய போட்டிகரமான ஒரு வேலையணி, தேர்ச்சித்திறன்களை வழங்குதல், பயிற்சி மற்றும் ஆட்சேர்ப்பு நலன்களை உச்ச அளவினதாக்குதற்கான வலையமைப்பாக்கம், மொழிக் கற்கையும் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களும், புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளினதும் சுதந்திரங்களினதும் பாதுகாப்பு ஆகியவற்றை இலக்காகக் கொண்ட பொருத்தமான மனித வள அபிவிருத்தித் திட்டங்கள் தேவை.

அபிவிருத்தியில் புலம்பெயர் அனுப்பீடுகளின் பங்கு, குறிப்பாகப் பிள்ளைகளுக்கான கல்வி மற்றும் சுகாதார நலம் பேணுகை ஆகியவற்றினூடாக மனித மூலதன உருவாக்கத்தில் அதன் பங்கு மேலும் சிறந்த முறையில் விளங்கிக் கொள்ளப்படவும் ஒப்புக் கொள்ளப்படவும் வேண்டும். புலம் பெயர் அனுப்பீடுகள், பிள்ளைகளின் கல்வியையும் சுகாதார நலம் பேணுகையையும் இயலச் செய்கின்ற தனிப்பட்ட குடும்பக் கைமாற்றங்களாதலால் அனுப்பீடுகளின் தொகையை அதிகரிப்பதற்கும், கைமாற்றச் செலவுகளைக் குறைப்பதற்கும், பணம் அனுப்புவதற்கான நிறுவன ரீதியான தெரிவுகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். புலம் பெயர் சேமிப்புத் திட்டங்களும் முதலீட்டு ஊக்குவிப்புக்களும் புலம் பெயர் அனுப்பீடுகள் அபிவிருத்திக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிக்கக் கூடிய வேறு வழிமுறைகளாகும்.

புலம்பெயர் திரும்பலும் சுழற்சியும் திறன்களின் கைமாற்றத்துக்கும் ஆக்க வளமுள்ள தொழிலுக்கும் முரண்பாடற்ற சமூக ஒருங்கிணைப்புக்கும் முக்கிய வாய்ப்புக்களாயுள்ளன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் திரும்பிவரும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அவர்கள் புறப்படும் கட்டத்தில் தொடங்கி உள்நாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கும் தேசிய மற்றும் தனிப்பட்ட அபிவிருத்திக்காக அவர்களின் தேர்ச்சித் திறன்களையும் வாய்ப்பு வளங்களையும் பயன்படுத்துவதற்குமான பொறிமுறையொன்றை வடிவமைத்துச் செயற்படுத்தும். இதற்கு ஆதரவாக முதலீட்டுக்கும் தொழில் முயற்சி உருவாக்கத்துக்குமான ஒழுங்கான ஆய்வுகளும் ஊக்குவிப்புக்களும் மேற்கொள்ளப்படும். கடல் கடந்த நாடுகளில் தேர்ச்சித்திறனுள்ள தொழில் வல்லுனர்களாக வேலை செய்கின்ற இலங்கையர்கள் திரும்பிவந்து தாய்நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் அவர்களின் வளங்களையும் தேர்ச்சித் திறன்களையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்துவதற்குத் தேசிய எல்லை கடந்த சமூகங்களை ஈடுபடுத்துதல் மற்றுமொரு முக்கிய உபாயமாகும். இந்நோக்கத்துக்காக உலகெங்கும் பரவியுள்ளவர்கள் பற்றிய தகவல் திரட்டுதல், தேசிய எல்லை கடந்த சமூக நிறுவனங்களுடன் இணைப்புகள், உலகெங்கும் பரவியுள்ள எமது விஞ்ஞானிகளுடனும் புத்திஜீவிகளுடனும் வலையமைப்பாக்கம் என்பவை ஊக்குவிக்கப்படும்.

தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய விரிவான தகவல் மற்றும் தரவுத் தளத்தின் தேவை கண்டுணரப்பட்டுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களின் தோற்றப்பாடுகளும் எண்ணிக்கைகளும் பற்றி நம்பத்தக்க முறையில் அறிவிக்கின்ற ஆய்வுகளும் ஒழுங்கான கண்காணிப்பும் அபிவிருத்தி, தொழிலாளர் புலம் பெயர்வு, பாதுகாப்பு மற்றும் நல்ல ஆட்சிமுறை ஆகியவற்றுக்கிடையில் மேலும் சிறந்த பொருத்தத்தைச் சாதிப்பதற்கான வழிமுறைகளாகும். மேலும் இது பல்வகைப்பட்ட பின்னணிகளையும் வகுதிகளையும் சேர்ந்த புலம் பெயர் தொழிலாளர்களுக்குக் கூடுதலாக வேறுபடுத்தப்பட்ட சேவைகள் வழங்கப்படுதலை இயலச் செய்யும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு இலங்கையர்களின் புலம்பெயர் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முனைப்படுத்திக் காட்டுவதற்கும் வெளிநாட்டில் அவர்களின் ஊதியம் மிக்க தொழிலின் ஊக்குவிப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கைப் புலம்பெயர் ஆய்வுகள் நிறுவகத்தைத் தாபிக்கும். இத்தேசியக் கொள்கையானது அதன் விருத்திச் செயல்முறையில் முக்கிய பங்கீடுபாட்டாளர்களின் பூரணமான, தீவிர பங்கேற்புடன் விருத்தி செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய இத்தேசியக் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்கின்றது. இச் செயல்முறையில் முக்கிய பங்கீடு பாட்டாளர்களினதும் செயற்பாட்டாளர்களினதும் பங்குகளையும் பொறுப்புக்களையும் ஒப்புக் கொள்கின்ற அமைச்சு இக்கொள்கையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவர்களின் ஒத்துழைப்பை நம்பியுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு இக்கொள்கையைச் செயற்படுத்தல் பற்றியும் அதன் குறிக்கோள்கள் எய்தப்படுதல் பற்றியும் கண்காணிப்பதற்கும் திரும்ப அறிக்கையிடுவதற்குமான பொறிமுறைகளைத் தாபிக்கும்.

# உள்ளடக்கம்


அறிமுகம் ....................................................1

தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய தேசியக் கொள்கைக் கூற்று ....................................................7

தொழிலாளர் பிரிவு 1: புலம்பெயர்ச்சிச் செயல்முறையின் ஆளுகை ....................................................9

பிரிவு 2: புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பும் வலுவளிப்பும் ....................................................19

பிரிவு 3: புலம்பெயர்வையும் அபிவிருத்திச் செயல்முறைகளையும் இணைத்தல் ............33

பின்னிணைப்பு 1 இலங்கையில் தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறை ....................................................41

பின்னிணைப்பு 2 கௌரவம், பாதுகாப்பு மற்றும் ஒப்புரவு ஆகிய நிலைமைகளின் கீழ் புலம்பெயர்வை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேசக் கடப்பாடுகள் ....................47

பின்னிணைப்பு 3 தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய தேசியச் சட்டம் ....................................................49

பின்னிணைப்பு 4 உசாத்துணைகள் ....................................................51

பின்னிணைப்பு 5 முத்தரப்பு வழிப்படுத்தும் குழுவின் உறுப்பினர்கள் ....................................................55

பின்னிணைப்பு 6 செயற் குழுக்களின் உறுப்பினர்கள் ....................................................57

# அறிமுகம்

தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய இலங்கைத் தேசியக் கொள்கை வேறு நாடுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரஜைகள் தொடர்பிலான அரசக் கொள்கையைத் தெளிவுபடக் கூறுவதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சினால் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இக் கொள்கை பின்வரும் இலக்குகளைக் கொண்டுள்ளது.

1. பொருளாதாரத்தில் தொழிலாளர் புலம்பெயர்வின் பங்குக்கான நீண்ட காலத் தொலைநோக்கொன்றை விருத்தி செய்தல்.

2. பொருளாதாரம், சமுதாயம், புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் ஆகியவற்றின் மீது தொழிலாளர் புலம்பெயர்வின் நன்மைகளை மேம்படுத்துதலும் அதன் பாதகமான தாக்கங்களை இழிவளவாக்குதலும்.

3 புலம்பெயர் தொழிலாளர்களின்[1] எல்லா மனித உரிமைகளும் தொழில் உரிமைகளும் நிறைவேற்றப்படுதலையும் பாதுகாக்கப்படுதலையும் நோக்கிப் பணியாற்றுதல்.

இலங்கையிலிருந்து சர்வதேசத் தொழிலாளர் புலம்பெயர்வு கடந்த இரு தசாப்தங்களில் பத்து மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. பத்து இலட்சத்துக்கும் கூடிய புலம்பெயர்ந்தோர் வெளிநாடுகளில் வேலைசெய்கின்ற அதேவேளையில் அண்மைக் கால வருடாந்த வெளிப்பாய்வுகள் சராசரியாக ஏறக்குறைய 200,000 ஆட்களென அண்மைக்கால மதிப்பீடுகள் கூறுகின்றன. கடந்த பல ஆண்டுகளாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பண அனுப்பீடுகளின் கணிசமான உட்பாய்வுகளை உருவாக்கியுள்ளதுடன் உள்நாட்டு வேலைவாய்ப்புக்கும் பாதுகாப்பான ஒருவழிக் கதவாகவும் செயற்பட்டுள்ளது. உள்நாட்டுத் தொழில் அணியில் முன்னர் ஊக்கமாக ஈடுபட்டிருக்கமுடியாத அநேக பெண்களுக்கு கடல் கடந்த புலம்பெயர்வு தொழில் வாய்ப்புக்களைத் திறந்துவிட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கம் தேர்ச்சித் திறனுள்ள தொழிலாளர்களின் புலம்பெயர்வை அதிகரிப்பதிலும் தேர்ச்சித்திறன் குறைந்த தொழிலாளர்களின் (வீட்டுப் பணிப்பெண்களாக அமர்த்தப்படும் பெண் தொழிலாளர்கள் உட்பட) வெளிப்பாய்வைக் குறைப்பதிலும் குறிப்பான அழுத்தம் கொடுத்துள்ளது.

> எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகளின் பாதுகாப்புப் பற்றிய சர்வதேச (ஐ.நா) சமவாயத்தின் முகப்புரை 1990
>
> இலட்சக்கணக்கான மக்கள் சம்பந்தப்பட்டதும் சர்வதேச சமூகத்திலுள்ள பெருந்தொகையான அரசுகளைப் பாதிக்கின்றதுமான புலம்பெயர்வென்ற இயல் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தையும் பரவெல்லையையும் உணர்ந்து.
>
> சம்பந்தப்பட்ட அரசுகள் மீதும் மக்கள் மீதும் புலம்பெயர் தொழிலாளர் பாய்வுகளின் தாக்கத்தையும், புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் நடத்துதல் தொடர்பில் அடிப்படைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதனூடாக அரசுகளின் மனப்பாங்குகளை இசைவுபடுத்துவதற்குப் பங்களிக்கக்கூடிய நியமங்கள் தாபிக்கப்படவேண்டுமென்ற விருப்பத்தையும் தெரிந்து.
>
> ஏனையவற்றின் மத்தியில் அவர்களின் சொந்த அரசில் அவர்கள் இல்லாமையினாலும் தொழில் செய்யும் அரசில் அவர்கள் இருக்கின்றமையால் எதிர்கொள்ளக்கூடிய சிரமங்களின் நிமித்தமும் புலம்பெயர் தொழிலாளர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் தாம் அடிக்கடி ஆளாகக் காண்கின்ற வடுப்படும் நிலையைக் கருத்திற்கொண்டு,
>
> எங்ஙனும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் உரிமைகள் போதியளவில் ஒப்புக் கொள்ளப்படவில்லையென்றும் எனவே பொருத்தமான சர்வதேசப் பாதுகாப்பு தேவையென்றும் உறுதியாக நம்புகின்றது.

[1]வரைவிலக்கணங்கள்

ஒரு “புலம்பெயர் தொழிலாளர்” என்பது அவர் ஒரு தேசியப் பிரஜையாக இல்லாத ஓர் அரசில் ஊதியமளிக்கின்ற ஒரு நடவடிக்கையில் ஈடுபடவுள்ள, ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபட்டிருந்த ஓர் ஆளைக் குறிக்கின்றது. (சர்வதேச சமவாயம்). இது ஆவணப்படுத்திய மற்றும் ஆவணப்படுத்தாத தொழிலாளர்களையும் இலங்கையிலிருந்து நிரந்தரமாக அல்லது தற்காலிகமாகப் புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்களையும் வெளிநாடுகளிலிருந்து இலங்கையில் வேலை செய்கின்ற புலம்பெயர் தொழிலாளர்களையும் உள்ளடக்குகின்றது. இங்கு விரித்துக் கூறப்படும் தேசியக் கொள்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சின் ஆணைக்கிணங்க கடல் கடந்த தொழிலுக்காகப் புலம்பெயர்கின்ற தேசியத் தொழிலாளர்களை மட்டும் உள்ளடக்குகின்றது.

“புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்கள்” என்பது புலம்பெயர் தொழிலாளரைச் சார்ந்து வாழ்பவர்களைக் குறிக்கின்றது. இது வாழ்க்கைத் துணைகள், பிள்ளைகள், பெற்றோர் மற்றும் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியபோதிலும் அவர்கள் மட்டுமென்று வரையறுக்கவில்லை.

அபிவிருத்திக்கான பத்தாண்டுத் திட்டமும் ஏற்புடைய வேலைக்கான தேசியத் திட்டமும்[2] பொருளாதாரத் துக்குத் தொழிலாளர் புலம்பெயர்வின் முக்கியத்து வத்தை ஒப்புக் கொண்டுள்ளன. பத்தாண்டுத் திட்டம் கடல் கடந்த தொழிலாளர் புலம்பெயர்வை வழிப்ப டுத்துவதற்கான அடிப்படை உபாயமாக "பாதுகாப் பான, தேர்ச்சித் திறனுள்ள புலம்பெயர்வை" முனைப்படுத்திக்காட்டுகின்றது. 2007 பெப்ரவரியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்புக்காகத் தனிவேறான ஓர் அமைச்சு வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை

சர்வதேச சமவாயம்!

1. இதன் பின்னர் வேறு வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, தற்போதைய சம வாயம் பால், சாகியம், நிறம், மொழி, சமயம் அல்லது பற்றுறுதி, அரசியல் அல்லது வேறு அபிப்பிராயம், தேசிய இன அல்லது சமூகத் தோற்றம், தேசிய இனம், வயது, பொருளாதார நிலை, ஆதனம், விவாக நிலை, பிறப்பு அல்லது வேறு நிலை போன்ற எவ்வகையான வேறுபாடுமின்றி எல்லாப் புலப்பெயர் தொழிலா ளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஏற்புடையது.
2. தற்போதைய சமவாயம், புலம்பெயர் தொழிலா ளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் புலம்பெயர்வுக்கான ஆயத்தம், புறப்படுகை, இடைப்போக்கு, தொழில் புரியும் அரசில் தங்கியிருக்கும் மற்றும் ஊதியமளிக்கப்படும் காலம் முழுவதும், சொந்த அரசுக்கு அல்லது வழமையாக வதியும் அரசுக்குத் திரும்பிவரும் காலம் முழுவதும் ஆகியவற்றைக் கொண்டதான புலம்பெயர்வுச் செயல்முறை பூராவும் ஏற்புடையதாக வேண்டும்.

அமைச்சு உருவாக்கப்பட்டமை, இலங்கையில் தொழிலாளர் புலம்பெயர்வுக்கு அளிக்கப்பட்டுள்ள முன்னுரிமைக்கு மற்றுமோர் அறிகுறியாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஏறக்குறைய மூன்று தசாப்த அனுபவத்துடன் இலங்கை 1985 இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தாபிக்கப்பட்டதுடன் தொடங்கி ஒரு முதிர்ச்சியான கடல் கடந்த வேலைவாய்ப்பு நிர்வாக முறைமை யொன்றை விருத்தி செய்துள்ளது. இவ்விடயந் தொடர்பில் ஒப்பீடாக இலங்கை ஏனைய ஆசிய நாடுகளை விடச் சாதகமான நிலையிலுள்ளது. எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்க ளின் குடும்பங்களினதும் உரிமைகளின் பாதுகாப்புப் பற்றிய சர்வதேச சமவாயம் 1996இல் உறுதிப் படுத்தப்பட்டமை தேசிய புலம்பெயர்வுச் சட்டத்துக் கும் நடைமுறைக்கும் அடிப்படையான உருமாதிரிச் சட்டகத்தை வழங்கியது. 1985இன் அடிப்படைச் சட்டவாக்கச் சட்டகமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம்[3] இன்றைய தேவைகளுக்குப் பொருந்தக் கூடியதாக மாற் றியமைக்கப்பட்டு வருகின்றது. திருத்தப்பட்ட சட்டம் தேசிய சட்டசபைக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படு மென எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழிலாளர் புலம்பெயர்வுடன் தொடர்புடைய பல்வகைப்பட்ட அபிவிருத்தி சார்ந்த, பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளில் கவனஞ் செலுத் துதல் தொடர்பில் இலங்கை கடந்த பல ஆண் டுகளாக தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல் முறையில் ஆட்சிமுறை, புலம்பெயர் தொழிலாளர்க ளினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாது காப்பும் நலனோம்புகையும், புலம்பெயர்வின் அபிவிருத்தி நன்மைகளை மெய்யாக்குதல் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும் வகைதுறை ஏற்பாடுகளையும் தாபித்துள்ளது. இந்த அடியெடுப்புகள் எல்லாம் ஏற்புடைய வேலை, தொழிலின் கௌரவம் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் எல்லா மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல் என்ற கோட்பாடுக ளின் சட்டகத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடைமுறையிலுள்ள ஒரு தொடர்வரிசையான நிர் வாக மற்றும் சட்ட நடவடிக்கைகளின் மத்தியிலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறையில் தொடர்ந்தும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கு கின்றது. இலங்கையில் ஏற்புடைய வேலைக்கான தேசியக் கொள்கையில் (NPDW)[4] வலியுறுத்தியுள் ளவாறு அறிமுகப்படுத்தப்பட்ட எல்லாப் பாதுகாப்புக ளின் மத்தியிலும் ஆபத்தானதும் பாதுகாப்பற்றது மான நிலைமைகளின் கீழ் புலம்பெயர்கின்ற தொழிலாளர்களின் வடுப்படும் நிலை ஒரு பெரும் பிரச்சினையாயுள்ளது. பெண் தொழிலாளர் விஞ்சி மேம்பட்டுள்ள குறை தேர்ச்சித்திறன் வகுதிகளில் தொழிலாளர் புலம்பெயர்வின் செறிவு அதனுடன் தொடர்புடைய பாதுகாப்பு, குறைந்த ஊதியமும் அதன் விளைவான குறைந்த அனுப்பீடுகளும் பற்றிய பிரச்சினைகளுடன் மற்றுமொரு பெரும்

[2] தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, இலங்கையில் ஏற்புடைய வேலைக்கான தேசியக் கொள்கை, ஆகஸ்ட் 2006, கொழும்பு
[3] 1985 இன் 21 ஆம் இலக்க
[4] மேற்கூறிய அதே

சவாலாயுள்ளது. புலம் பெயர்வுக்கான பிரதான பயண இலக்குகளாக வளைகுடா நாடுகளில் இலங்கை பெருமளவுக்குத் தங்கியிருக்கின்றதாகப் பயண இலக்குகளின் குறுகிய வீச்சு மற்றுமொரு பிரச்சினையாகும். விட்டுச் செல்லப்படும் குடும் பங்கள் மீதும் பிள்ளைகள் மீதுமான தாக்கத்தின் பிரகாரம் புலம்பெயர்வின் சமூகச் செலவு அநேகரால் முனைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. எனவே கடல் கடந்த வேலைவாய்ப்பின் ஊக்கு விப்புக்கும் வெளிநாட்டில் தேசியத் தொழிலா ளர்களின் பாதுகாப்புக்கும் இடையில் நுண்ணிய சமநிலையைப் பேணுதல் தொடர்ச்சியான ஒரு சவாலாயுள்ளது. மேலும் அநேக ஆண்டுகளாக இரண்டு பில்லியன் டொலர்களுக்கும் கூடிய புலம்பெயர் அனுப்பீடுகளின் உட்பாய்வுகளை சிறப்பியல்பாகக் கொண்ட புலம்பெயர்வின் அபி விருத்தி நன்மைகளை உச்ச அளவினதாக்கு வதற்குக் கூடிய ஒழுங்கு முறையான கொள்கை யொன்று தேவைப்படுகின்றது.

1985 முதல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் (SLBFE) தொழில் அமைச்சின் கீழ் செயற்பட்டது. 2007 ஆம் ஆண்டு முதல் அது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும நலனோம்புகை அமைச்சின் (MFEPW) நோக் கெல்லையின் கீழ் வருகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு கொள்கை வகுத்தல், திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை ஊக்குவிப்பதற்கான உறுதியான பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கு நிதியிடல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாயுள்ளது. ஒரு பரந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு வலையமைப்பாகச் செயற்படும் இனங்காணப்பட்ட முகவர் நிறுவனங்களூடாக அரசாங்கக் கொள்கையைத் தூண்டி விடுகின்ற மேலோங்கிய குறிக்கோளை அது கொண்டுள்ளது. அமைச்சின் தொலைநோக்கு உலகளாவிய வேலைச் சந்தையில் மிகச் சிறந்த தேர்ச்சித்திறனும் தொழில்வல்லமையும் மிக்க தொழிலாளர்களை வழங்குபவராகுதல். அதன் செயற்பணி தொழிலாளர் புலம்பெயர்வுத் துறை முழுவதையும் கிராக்கியால் தூண்டப்படும் ஒரு செயல்முறையாக மாற்றுதலும், அவசியமான ஊக்குவிப்பு, பாதுகாப்பு மற்றும் நலனோம்பு நடவடிக்கைகளுடன் தேவைப்படும் கட்டமைப்பு மாற்றங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதனை உச்ச அளவில் போட்டிகரமான தாக்குதலுமாகும்.[5]

2007இல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்புக்கும் நலனோம்புகைக் குமான ஒரு கொள்கைச் சட்டகத்தையும் செயல் திட்டத்தையும்[6] விவரிக்கின்ற அமைச்சரவை நிருப மொன்றைச்[7] சமர்ப்பித்தது. இந்நிருபம் “தேசிய பொருளாதாரத்துக்கு அதன் பங்களிப்பின் முக்கியத் துவத்தை உணர்ந்து, புதிய பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சந்தையின் போட்டி கரமான சவால்களை எதிர்கொள்வதற்குத் தொழிற் சந்தையின் புலம்பெயர்துறை முழுவதும் கிராக்கியால் தூண்டப்படும் ஒரு செயல்முறையாக மாற்றப்படுதலையும் புதிய அடியெடுப்புக்கள்

ஏற்புடைய வேலை

- ஏற்புடைய வேலை என்ற எண்ணக்கரு அடிப்படைக் கோட்பாடுகள், வேலையின் போதான உரிமைகள் வேலைவாய்ப்பும் வருமானங்களும், சமூகப் பாதுகாப்பும் சமூக உரையாடலும் என்ற நான்கு, ஒன்றோடொன்று தொடர்புடைய பரிமாணங்களைக் கொண்டுள்ளது. உலக மட்டத்தில் ஏற்புடைய வேலையின் ஊக்குவிப்பு ஒரு “நியாயமான உலகமயமாக்கலுக்கு” பங்களிக்குமென நம்பப்படுகின்றது.

- ஏற்புடைய வேலையின் உலகப் பரிமாணம் அவர்களின் வேலையின் அல்லது தொழிலின் ஊடாக மக்கள் மீது உலக மயமாக்கலின் நேரடித்தாக்கத்திலிருந்து எழுகின்றது. வாய்ப்புக்களும் அனுகூலங்களும் போன்று இடர்களும் விலக்கல்களும்.

- பெண்களினதும் ஆண்களினதும் பொதுவான அபிலாசைகள் நிறைவேற்றப்படுதலை நோக்கிய பாதை தேசிய மட்டத்தில் ஆரம்பமாகின்றது. அங்குதான் மக்கள் ஏற்புடைய வேலையில் இடைவெளிகளையும் தமது சொந்தச் சமூகங்களினுள் பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர்.

- மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளில் எதிர்பார்க்கப்படும் உலக இலக்குகளிலிருந்து வறுமைக்குறைப்பு உபாயங்கள் போன்ற புதிய திட்டமிடல் சட்டகங்கள் வரை வறுமைக்குறைப்பு முயற்சிகளில் முக்கிய பங்கு வகிக்கும்படி ஏற்புடைய வேலை நிகழ்ச்சிநிரல் கோரப்படுகின்றது.

[5] *www.minfep.gov.lk*
[6] பின்னிணைப்பு 5
[7] 2007 - 02 ஆம் இலக்க

மேற்கொள்ளப்படுதலையும் தோன்றிவரும் சந்தை நிலைமைகள் அவசியமாக்கியுள்ளன” என்று ஏற்றுக் கொள்கின்றது. இந்நிருபம் அதன் செயல் திட்டத்தில் 18 முன்மொழிவுகளைக் குறித்துரைக் கின்றது. இந்நிருபம் கூடிய தேர்ச்சித்திறனுள்ள இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களை ஊக்கு வித்தல், இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்க ளுக்குத் தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல், மொழிதிறன்கள் உட்படத் தேர்ச்சித் திறன்களை முன்னேற்றுதல், உலகத் தரங்களை எதிர்கொள்ளக் கூடியதாகப் பயிற்சியைத் தரமுயர்த்துதல், அனுப் பீட்டு நன்மைகளை உச்ச அளவினதாக்கல், புலம் பெயர் தொழிலை ஊக்குவிப்பதற்கான செயல் தூண்டுதல்கள் ஆகிய பிரதான விடயங்களில் பொதுவாகக் கவனஞ் செலுத்துகின்றது.

இலங்கையில் கடல் கடந்த வேலைவாய்ப்பில் அக்கறையுள்ள வேறும் அநேக அமைச்சுக்களும் அரசாங்க முகவர் நிறுவனங்களும் உள்ளன. தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு, வெளிநாட்டு அலுவல்கள் ஆகிய அமைச்சுக்கள், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு. வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு, சுகாதார நலத்துறை மற்றும் போசணை அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டுகை அமைச்சு. நிதி. திட்டச்செயற்படுத்தல் அமைச்சு ஆகியவை இவற்றில் அடங்கும். ஏனைய பங்கீடு பாட்டாளர்களாகத் தொழில் வழங்குனர்கள், தொழிற்சங்கங்கள், புலம்பெயர்தொழிலாளர் சங்கங் கள், சிவில் சமுதாயம், ஆய்வாளர்களும் ஆய்வு நிலையங்களும், ஊடகங்கள் மற்றும் அக்கறை யுள்ள சர்வதேச முகவர் நிறுவனங்கள் அமை கின்றன.

## இலங்கைக்கான தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையொன்றை விருத்தி செய்தல்.

மேற்கூறிய பின்னணியில் தொழில் உறவுகள் மற் றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, புலம் பெயர்வென்ற விடயம் அதன் நோக்கெல்லையின் கீழிருந்த காலப்பகுதியின்போது, நீண்ட காலத் தொலைநோக்கொன்றின் அடிப்படையிலான விரி வான கொள்கை ஆவணமொன்றில் தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய இலங்கை அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவுபடக் கூறவேண்டிய தேவையைத் தொடக்கத்தில் இனங்கண்டது. எனவே அமைச்சு, குறிப்பாக பத்தாண்டு அபிவிருத்தித் திட்டம், ஏற்புடைய வேலைக்கான தேசிய செயல் திட்டம், உறுதிப்படுத்தப்பட்ட 1990 இன் எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகளின் பாதுகாப்புப் பற்றிய சர்வதேச சமவாயம்,[8] 2004 யூனில் சர்வதேச தொழில் மாநாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நியாயமான பங்கீடு பற்றிய தீர்மானம் மற்றும் 2006 ஐஎல்ஓ தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய பலதரப்புச் சட்டகம் ஆகியவற்றின் சூழமைவில் இலங்கைக் கான தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையொன்றைத் தயாரிப்பதில் உதவும்படி “ஐஎல்ஓ” வைக் கோரியது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு இந்த அடியெடுப்பைத் தொடர்வதற்கு “ஐஎல்ஓ” உதவியைப் பெறுவதில் அதன் ஆர்வத்தை உறுதிப்படுத்தியது. 2007 ஏப்பிரலில் களத்தில் இறக்கப்பட்ட “ஐஎல்ஓ” ஆலோசனைத் தூதுக்குழு தேசியத் தொழிலாளர் புலம் பெயர்வுக் கொள்கையை விருத்தி செய்வதற்கான பொதுவான உருவரையை வழங்கியது.[9]

தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய திட்டவரைபின் பிரதான குறிக்கோள், பங்கீடுபாட்டாளர் கலந்தா லோசனைச் செயல்முறையொன்றினூடாகத் தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை விருத்தி செய்வதற்கான ஓர் உபாயத்தைக் கோடிட் டுக் காட்டுதலாகும். அது தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையின் பின்வரும் முக்கிய குறிக்கோள்களைக் கண்டுணர்ந்தது.

- புலம்பெயர்வுக் கொள்கையை வகுப்பதில் சமூகப் பங்காளிகளுடனும் சிவில் சமுதா யத்துடனுமான கலந்தாலோசனைச் செயல் முறையின் அடிப்படையில் தொழிலாளர் புலம்பெயர்வின் நல்ல ஆட்சிமுறையும் ஒழுங்குபடுத்தலும் (புலம்பெயர்வின் ஆட்சி முறையும் ஒழுங்குபடுத்தலும்).

- புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் விட்டுச் செல்லப்படும் அவர்களின் குடும்பங்க

[8] ஐ.நா. புலம்பெயர் தொழிலாளர் சமவாயம் என்று பிரபலமாக அறியப்படுவது. பொதுச் சபையால் அதன் 45ஆவது கூட்டத் தொடரில் 1990 திசெம்பர் 18ந் தேதியன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. *(A/RES/45/158)*

[9] இலங்கைக்கான தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கைச் சட்டகத்தின் ஆக்கக் கூறுகள், இலங்கைக்கான ஐஎல்ஓ ஆலோசனைத் தூதுக்குழுவின் வரைவு அறிக்கை, 18 -26 ஏப்பிரல் 2007, சர்வதேச புலம்பெயர்வு நிகழ்ச்சித் திட்டம், ஐஎல்ஓ, ஜெனீவா - ஐஎல்ஓ அலுவலகம் கொழும்பு.

ளுக்கும் பயனுறுதியுள்ள பாதுகாப்பும் சேவைகளும் வழங்கல் (புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாத்தலும் வலு வளித்தலும்)

- அனுப்பீடுகள், திரும்பிவரும் புலம் பெயர் தொழிலாளர்களை மீளஒன்றிணைத்தல், சுழற்சிக் கொள்கைகள் மற்றும் தேசிய எல்லை கடந்த சமூகங்களுடன் இணைப் புகள் என்பவை ரீதியாக தொழிலாளர் புலம்பெயர்வின் அபிவிருத்திப் பங்களிப்புக ளைத் திரட்டுதல் (புலம்பெயர்வும் அபிவிருத்தியும்)

தேசியக் கொள்கையின் அபிவிருத்தியானது செயல் முறை முகாமைத்துவக் குழுவொன்றால் வசதிப் படுத்தப்பட்ட நான்கு முனைச் செயல்முறை யொன்றை உள்ளடக்கியது.

1. பின்வரும் பரப்புகளை ஆராய்வதற்கு மூன்று கருப்பொருள் ரீதியான செயற் குழுக்களைத் தாபித்தல் -1 தொழிலாளர் புலம்பெயர்வின் ஆட்சிமுறை, 2. புலம்பெயர் தொழிலாளர்க ளின் பாதுகாப்பும் வலுவளிப்பும் மற்றும் 3. புலம்பெயர்வையும் அபிவிருத்தியையும் இணைத்தல். மேலும் பிரச்சினைகளையும் தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறையி லுள்ள சவால்களையும் இடைவெளிகளையும் இனங்காண்பதற்கு ஒரு தொடரான செயற் குழுக் கூட்டங்களைக் கூட்டுதல். செயற் குழுக்கள் இச்செயல்முறையிலுள்ள அர சாங்கம், தொழில் வழங்குனர்களும் தொழிற் சங்கங்களும், சிவில் சமுதாய நிறுவனங்கள் ஆகிய முத்தரப்புப் பங்கீடுபாட்டாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தின. இது தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறையின் வெவ்வேறு ஆக்கக் கூறுகளை முன்னேற்றுவதற்கான தேசியச் செயல்திட்டமொன்றை இனங்காண்ப தற்கு வழிவகுத்தது.

2. தொழிலாளர் புலம்பெயர்வுச் செயல்முறை யில் சம்பந்தப்பட்டுள்ள முக்கிய அமைச்சுக் களினதும் முகவர் நிறுவனங்ளினதும் பிரதி நிதிகளைக் கொண்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலநோம்புகை அமைச்சரின் தலைமையில் அவ்வமைச்சால் கூட்டப்படும் தேசிய முத் தரப்பு வழிப்படுத்தும் குழுவொன்றைத் தாபித்தல்.

3. செயற்குழுக்களினதும் வழிப்படுத்தும் குழு வினதும் அறிவுத்துறையைச் சேர்ந்த தேசிய ஆலோசகர்களினதும் வழிகாட்டலின் கீழ் வரைவுத் தேசியத் தொழிலாளர் புலம் பெயர்வுக் கொள்கையை விருத்தி செய்தல்.

4. ஒரு கருத்தொற்றுமைக்கு வந்து தேசியக் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்காகத் தேசியப் பங்கீடுபாட்டாளர்களுக்கு (அரசு, சிவில் சமுதாயம், தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிற்சங்சங்கள், ஊடகங்கள்) வரைவுக் கொள்கையைச் சமர்ப்பித்தல்.

செயற்குழுக்கள் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கை பற்றிய முத்தரப்பு வழிப்படுத்தும் குழு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலநோம்புகை அமைச்சு, ஐஎல்ஓ ஆகியவற்றின் வழிகாட்டலின் கீழ் தமது நடவடிக்கைகளை மேற் கொண்டதுடன் செயல்முறை முகாமைத்துவக் குழுவுடனும் நெருக்கமாக ஊடாடியது. இனங் காணப்பட்ட விடயங்களில் பங்கீடுபாட்டாளர் கலந்தாலோசனைகளை ஊக்குவித்த பதின்மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவை தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கைக்கான குறித்த யோசனைகளுக்கு வந்தன.[10]

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரின் தலைமையிலான முத் தரப்பு வழிப்படுத்தும் குழு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புக் பணியகம், தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சு, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, குடி வரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், நிதி அமைச்சின் தேசியத் திட்டமிடல் திணைக்களம், சிறு வர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டுகை அமைச்சு, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு, இலங்கைத் தொழில் வழங்குனர்களின் சம்மேளனம், தொழிற்சங்க ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான தேசியச் சங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுதந்திர

[10]பார்க்க பின்னிணைப்பு 5 : செயற்குழுக்களுக்கான செயலாற்று நியதிகள்

தொழிலாளர் சங்கம், கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல்துறை, அனுமதிப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டி ருந்தது. முத்தரப்பு வழிப்படுத்தும் குழுவின் பிரதான குறிக்கோள் தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையின் அபிவிருத்தியில் ஒட்டுமொத்த வழி காட்டுதலை வழங்குதலும் அதன் செயற்படுத்தலை உறுதிப்படுத்தலுமாகும்.

தேசியத் தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள் கையை விருத்தி செய்யும் செயல்முறையானது கலந்தாலோசனைகள், வரைவு செய்தல், மீளாய்தலும் முடிவுசெய்தலும் ஆகியவற்றைக் கொண்ட ஓர் ஐந்து மாத (2008 யூன் முதல் ஒக் டோபர் வரை) செயல்முறையாயிருந்தது. இச்செயல் முறை செயற்குழுக்களின் பதின்மூன்று கூட்டங்க ளையும் முத்தரப்பு வழிப்படுத்தும் குழுவுடனான நான்கு கூட்டங்களையும் செயற்குழுவினதும் வழிப்படுத்தும் குழுவினதும் உறுப்பினர்களுடனான பல்வேறு கலந்தாலோசனைகளையும் உள்ளடக்கி யது. தேசிய பங்கீடுபாட்டாளர் கலந்தாலோச னையொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு, வழிப் படுத்தும் குழுவினதும் வரைவு ஆலோசனைக் குழுவினதும்[11] வழிகாட்டலின் கீழ் முடிவுசெய்யப் பட்டது.

[11]வரைவு ஆலோசனைக் குழு, கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட கல்விமான்களையும் புலம்பெயர்வு பற்றிய ஐஎல்ஓ சிரேஷ்ட சிறப்புத்துறையாளரையும் கொண்டிருந்தது.

# தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிய தேசிய கொள்கைக் கூற்று

இலங்கை பத்து வருட அபிவிருத்திச் சட்டகம் (2006 - 2016) மற்றும் இலங்கையில் கௌரவமான தொழிலுக்கான தேசிய கொள்கை ஆகியன இலங்கையில் கௌரவமான தொழிலுக்கான ஒரு தெளிவான தொலைநோக்கினை நிலை நாட்டியுள்ளன.

"சுதந்திரம், ஒப்புரவு, பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் நிறைந்த சூழலில் உற்பத்தித் திறன்மிகு தொழிலைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆண்களுக்கும் பெண்களுக்கும் மேம்படுத்திக் கொடுப்பதன் மூலம் வறுமை மற்றும் உரிமை மறுப்பு அற்ற சிறந்த தரத்திலான வாழ்வினை சகல இலங்கையர்களும் அனுபவிக்கக்கூடிய சமாதானமும் செழிப்பும் நிறைந்த எதிர்காலம்".

எனவே அனைத்துப் பிரஜைகளுக்கும் கௌரவமான தொழிலினை உருவாக்குதல் மற்றும் உலகளாவிய ரீதியில் தொழிலுக்கமர்த்தக் கூடிய தொழிற்படையினை உருவாக்குதல் எனும் ஒட்டுமொத்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக தொழிலுக்கான புலப்பெயர்வினைக் கருதமுடியும்.

சுதந்திரம், ஒப்புரவு, பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் ஆகியவை நிறைந்த சூழலில் கௌரவமானதும் உற்பத்தித் திறன்மிக்கதுமான தொழிலினைப் பெறுவதற்காக சகல ஆண்களும் பெண்களும் புலம்பெயர்வதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்துவதையே தொழிலாளர் புலப்பெயர்ச்சி பற்றிய இலங்கைத் தேசியக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொழிலில் ஈடுபடுவோரின் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது உயர் தராதரத்தில் பற்றிப் பிடிக்கப்படுகின்ற தொழில் சூழலினைப் பெற்றுக் கொள்ள திறமைமிக்க ஆண்களினதும் பெண்களினதும் புலப்பெயர்ச்சியினை தொழிலாளர் புலப்பெயர்ச்சிக்கான தேசிய கொள்கை மேம்படுத்தி ஆதரவு வழங்குகின்றது.

தொழிலுக்கான கௌரவம், பாதுகாப்பு மற்றும் ஒப்புரவு நிறைந்த சூழலில் புலப் பெயர்ச்சிக்கு ஆதரவும் வசதிப்படுத்தலும் வழங்குவதற்காக இலங்கையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள சர்வதேச தராதரத்தினைப் பிரதிபலிக்கின்ற, கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நிர்வாகச் செயல்விதிகள் போன்றவற்றை அமுல் படுத்துவதில் நல்லாட்சியின் கோட்பாடுகளை தொழிலாளர் புலப்பெயர்ச்சிக்கான தேசிய கொள்கை அங்கீகரிக்கின்றது.

அந்நியச் செலாவணி மூலமும், ஏனைய பொறிமுறைகள் மூலமும் தேசிய பொருளாதாரத்திற்கு அனைத்து புலம்பெயர் தொழிலாளர்களும் ஆற்றுகின்ற கணிசமான பங்களிப்பினை தொழிலாளர் புலப்பெயர்ச்சிக்கான தேசிய கொள்கை அங்கீகரிக்கின்றது. மேலும் பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் துலாம்பரமாகக் காட்டப்பட்டுள்ள சர்வதேச புலப்பெயர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான சாதகமான தொடர்புகளையும் அது அங்கீகரிக்கின்றது.

எனவே:

கொள்கைகள் மூலமும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் மூலமும் புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகைக்கான உயர்தராதரங்களை சர்வதேச நியமங்களுக்கு ஏற்பப் பாதுகாத்து மேம்படுத்துவதன் மூலமும் சகல புலம்பெயர் தொழிலாளர்களினதும் பூரண பாதுகாப்பினை தேசிய கொள்கை உறுதிப்படுத்தும்.

எந்தவொரு கொள்கையோ சட்டமோ அல்லது ஒழுங்குவிதியோ இலங்கைப் பிரஜைகளின், விசேடமாக புலம்பெயர் தொழிலாளர்களின் கௌரவத்தினையும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தினையும் தாரைவார்த்துக் கொடுக்காது அல்லது மீறாது என்பதை அரசு உறுதிப்படுத்தும்.

மேலும் அனைத்து வடிவிலுமான சட்டவிரோத புலப்பெயர்ச்சி, ஆட்களை வஞ்சக் கடத்தல் செய்தல் மற்றும் மனிதர்களைக் கடத்தல் போன்றவற்றைத் தடுக்க அரசு நடவடிக்கைகளை எடுக்கும்.

சகலருக்கும் சமமான வாய்ப்புக்களுடன் கௌரவம், பாதுகாப்பு மற்றும் ஒப்புரவு போன்ற நிலைமைகளுடனான புலப்பெயர்ச்சிக்கான செயன்முறையினை மேம்படுத்த அரசு முயற்சி எடுக்கலாம். அதேவேளை அரசானது உள்ளூர் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதுடன், செல்வம் மற்றும் அபிவிருத்தி நலன்கள் போன்றவற்றின் சமமான விநியோகத்தையும் மேம்படுத்தும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒழுங்கு

படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத தொழிலுக்கான பூரண பாதுகாப்பினை அரசு வழங்கலாம். மேலும் பூரண தொழில்வாய்ப்பு மற்றும் அனைவருக்கும் சமமான தொழில் வாய்ப் புக்கான சந்தர்ப்பங்களையும் அது மேம்படுத்தும் இதன் பொருட்டு புலம்பெயர் தொழிலாளர்களுக்கு போதுமானதும் உரிய காலத்தில் வழங்கப்படுவ துமான பொருளாதார, சட்ட நலனோம்புகைச் சேவைகளையும் ஏனைய சேவைகளையும் அரசு வழங்கலாம்.

சட்டத்தின் முன் பெண்களினதும் ஆண்களினதும் அடிப்படைச் சமத்துவத்தினையும் தேசத்தினைக் கட்டி எழுப்புவதில் பெண்களின் முக்கியமான வகி பாத்திரத்தையும் அரசு உறுதிப்படுத்துகின்றது. இலங்கைப் பெண் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பினையும் அவர்களின் குறிப்பிடத்தக்க பாதிப்புறு நிலையினையும் அங்கீகரித்துள்ள அரசு புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதிக்கின்ற கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் உருவாக்கத்திலும் அமுல்படுத்தலிலும் பால்நிலைக் கூருணர்வு மிகு அடிப்படைப் பிரமாணங்களை பிரயோகிக்கலாம். புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகைக்காகவும் வலுவூட்டல்களுக்காகவும் நியமிக்கப்படும் அமைப்புக்களிலும் இதனை அரசு கருத்தில் கொள்ளும். தீர்மானம் வகுத்தல். சிறப் புரிமைகளையும் உரிமைகளையும் பூரணமாக அனுபவித்தல் மற்றும் புலப்பெயர்ச்சியின் நன்மைகளை அனுபவித்தல் போன்றவற்றிற்கான உரிமைகளைப் பயன்படுத்துவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களை வலுவூட்டுவதைக் கொள் கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் நோக்கமாகக் கொள்ளும்.

சகல புலம்பெயர் தொழிலாளர்களுக்குமான பாது காப்பிலுள்ள பிரதான மூலகம் திறன்களைக் கொண்டிருத்தல் என்பதை அரசு அங்கீகரிக்கின்றது. எனவே தொழிலாளர்களுக்கு திறன்களை வழங்கு வதற்கான செயன்முறைகளை அரசு மேற்கொள் ளும் அதேவேளை தாய்நாட்டில் திறன்களுக்கு இருக்கின்ற தேவை பற்றிக் கவனம் குவிப்பதுடன் திறன்களின் பரிமாற்றத்தினையும் மேம்படுத்தும்.

தொழிலாளர் புலப்பெயர்ச்சி பற்றிய இலங்கையின் தேசிய கொள்கை, வெளிநாடுகளில் இருந்து தொழில்வாய்ப்புப் பெற்று (ஒப்பந்த ரீதியாக அல்லது முறையான ஒப்பந்தங்கள் அல்லது தொழில் விசா போன்ற ஏனைய ஆவணங்கள் இன்றி) இலங்கைக்குள் வாழும் புலம்பெயர் தொழிலாளர்களை உள்ளடக்குவதில்லை.

# புலம்பெயர்ச்சிச் செயன்முறையின் ஆளுகை

தொழிலாளர் புலப்பெயர்ச்சிச் செயன்முறையினை ஒழுங்குபடுத்துவதற்கு நல்லாட்சி இன்றியமையாத ஒன்று என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆட்சியானது செயற்திறன்மிகு நிறுவனங்களையும் ஒழுங்கு விதிகளையும் உள்ளடக்குகின்றது. அத்துடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பதனையும் மக்களின் வாழ்க்கையினைப் பாதிக்கின்ற நிறுவனங்களிலும் ஒழுங்கு விதிகளிலும் பரந்த அளவில் பங்குபற்றுவதை மேம்படுத்துவதையும் உள்ளடக்குகின்றது. மேலும் அதிகளவிலான ஒப்புரவுமிகு பொருளாதார மற்றும் சமூக விளைவுகளைப் பெறுவதையும் உள்ளடக்குகின்றது. பங்குபற்றல், வெளிப்படைத்தன்மை, மற்றும் வகைப் பொறுப்பு ஆகியன நல்லாட்சியின் பிரதான மூலகங்கள் எனப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் நோக்குகையில் நல்லாட்சியின் கருத்தியல்கள் பிரதான சர்வதேச மனித உரிமைகள் கருவிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் உரிமைகளுடன் இணைக்கப்படக்கூடியதாகும். சர்வதேச சமவாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகள் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளில் எதிர்பார்க்கப்படுகின்ற உலகளாவிய இலக்குகள் மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கைகள் மற்றும் சட்டகங்கள், வருமான உருவாக்கம், தொழில்வாய்ப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்றவற்றினை அணுகுமுறை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

நல்லாட்சி அணுகுமுறையானது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கௌரவமான தொழில் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றது. அது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ள நான்கு பரிமாணங்களை வலியுறுத்துகின்றது. அவையாவன, தொழிலின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் உரிமைகள், தொழில்வாய்ப்பு மற்றும் வருமானங்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகக் கலந்துரையாடல்கள். சமூகக் கலந்துரையாடல்கள் உலகளாவிய மட்டத்தில் இடம் பெறும்போது அது “நியாயமான உலகமயமாக்கத்திற்கு” பங்களிப்புச் செய்கின்றது.
தொழிலாளர் புலப்பெயர்ச்சியின் நல்லாட்சியானது வெளிப்படையான கொள்கைகளையும் நடைமுறைகளையும் செயற்திறன்மிகு நிறுவனங்களையும் செயல்விதிகளையும் கொண்டுள்ளது. இவை உண்மையான புலம்பெயர் தொழிலாளர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்றது. அத்துடன் சர்வதேச தராதரங்கள், மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றுடனும் கொள்கைகளுடனும் சமூகக் கலந்துரையாடல்களுடனும் ஆலோசிப்பு மற்றும் பங்கேற்பு மிகு செயன்முறை ஆகியவற்றுடனும் ஒத்திசைவானதாக இருக்கின்றது. புலப்பெயர்ச்சிக் கொள்கைக்குப் பொறுப்பாக இருக்கின்ற நிறுவனங்களின் ஆற்றல்களைக் கட்டி எழுப்புவதையும் நல்லாட்சி தேவைப்படுத்துகின்றது. சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச கருவிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் தராதரங்கள் மற்றும் உள்நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நல்லாட்சியின் நியமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தொழிலாளர் புலப்பெயர்ச்சியினை ஆளுகை செய்ய வழிகாட்டுதல்களை இலங்கை உருவாக்கியுள்ளதுடன் ஏற்றுக் கொண்டுள்ளது. இக் கொள்கை உருவாக்கமானது கருத்தில் கொள்ள வேண்டிய நான்கு பிரதான பரப்புக்களைக் கொண்டுள்ளது. அவையாவன நிறுவனச் சட்டகம், சட்டவாக்கச் சட்டகம், ஒழுங்குபடுத்தல் சட்டகம், மற்றும் சமூகக் கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைச் சட்டகம்.

## நல்லாட்சிக்கான பிரதான விடயங்கள்

- தொழிலாளர் புலப்பெயர்ச்சிச் செயன்முறைக்கான நிறுவனச் சட்டகம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சினால் வழங்கப்படுகின்றது. வாய்ப்புக்களை அடைந்து கொள்வதனை மேம்படுத்துவதில் தொழிலாளர் புலப்பெயர்ச்சிச் செயன்முறையில் முகவர்களின் பாத்திரத்தினைத் தெளிவாக வரைவிலக்கணப்படுத்துவது முக்கியமானதாகும். மேலும் நாட்டிற்கான நீண்டகாலத் தொலை நோக்கின் அடிப்படையில் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பாத்திரமும் தெளிவாக வரையறுக்கப்படுவது அவசியமாகும். இச் செயன்முறையில் ஈடுபட்டுள்ள ஏனைய முக்கியமான அரசாங்க நிறுவனங்களும் முகவர்களும் தொழில் உறவுகள் மற்றும் மனித வலு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, நீதி மற்றும் சட்ட மறுசீராக்கல் அமைச்சு, கல்வி மற்றும் உயர் கல்வித் திணைக்களம், தொழில் பயிற்சி மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சு, சுகாதாரம் மற்றும் போசணை அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டல் அமைச்சு,

[12] இலங்கையில் கௌரவமான தொழிலுக்கான தேசிய கொள்கை (2006) தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் ஆட்கள் பதிவு திணைக்களம்.

- வெளிநாட்டிற்கு புலம்பெயர்தலை ஒழுங்குபடுத்துகின்ற முக்கியமான அமைப்பு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமாகும். (SLBFE) சட்டவாக்க ஏற்பாடுகளினால் தனது ஆணையைப் பெற்றுக் கொள்கின்றது. வெளிநாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெறநாடும் இலங்கையர்கள் கௌரவமான, பாதுகாப்பான மற்றும் ஒப்புரவான சூழலில் புலம்பெயர்வதை ஒழுங்குபடுத்தி உறுதிசெய்வதற்கான பரந்த ஆணையினை SLBFE கொண்டுள்ளது. தொழிலாளர்களின் புலப்பெயர்ச்சிக்கான சட்டவாக்கச் சட்டகமானது 1985ம் ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. SLBFE ஐ நிறுவுவது மற்றும் அதன் ஆணை, அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை நிர்ணயிப்பதில் சட்டம் கவனம் குவிக்கின்றது.

- சகல புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச சமவாயத்தினை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்கள் பற்றிய இரண்டு ஐஎல்ஓ சமவாயங்களை ஏற்றுக் கொள்வதை இலங்கை பரிசீலித்து வருகின்றது. தொழில் வாய்ப்புக்காகப் புலம்பெயர்தல் (திருத்தப்பட்டது) 1949 (இல 97) மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் (குறை நிரப்பு ஏற்பாடுகள்) 1975 (இல 143)

- செயன்முறையிலே பிரதான பங்கீடுபாட்டாளர் என்ற ரீதியில் வேலைவாய்ப்பு முகவர்களின் (அரச மற்றும் தனியார்) பங்களிப்பினை அரசு அங்கீகரிக்கின்றது. இதன்படி, வேலைவாய்ப்பு முகவர்களின் பாத்திரமானது தொழிலாளர் புலப்பெயர்ச்சியின் ஆளுகையைப் பொறுத்த அளவில் முக்கியமானதாகும். வேலைவாய்ப்பு வழங்குதல் SLBFE யின் கீழ்வரும் அரச ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) உத்தரவுப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் சங்கத்தினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற தனியார் வேலைவாய்ப்பு முகவர்களுக்கும் (ALFEA) ஆணையாக வழங்கப்பட்டுள்ளது.

- தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளில் உள்ள இலங்கையின் ராஜதந்திர அலுவலகங்கள் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பினையும் நலனோம்புகையினையும் வழங்குவதற்கான ஆணையினையும் வசதியினையும் கொண்டுள்ளன. சேவையிலுள்ள மற்றும் சேவையிலிருந்து விலகியுள்ள காலப்பகுதியில் தொழிலாளர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற இவற்றின் பாத்திரங்கள் இன்றியமையாதவையாகும். விசேடமாக பல்வேறு காரணங்களினால் சேவையினைவிட்டு விலகுகின்ற தொழிலாளர்கள் மற்றும் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுகின்ற தொழிலாளர்கள் தொடர்பில் இவற்றின் பாத்திரம் முக்கியமானதாகும். எனவே தொழிலாளர்களின் திரும்பல் மற்றும் மீளிணைப்பு ஆகியவற்றுக்கு இவற்றின் சேவை விஸ்தீரணமடைகின்றது.

- இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் குறைவான திறன்களை உடையோராகக் காணப்படுகின்றனர். திறன்மிக்கவர்கள் மற்றும் தொழில்வாண்மைமிக்கோருடன் ஒப்பிடுகையில் குறைவான திறன்களை உடைய தொழிலாளர்கள் மனித உரிமை மீறல்களுக்கு - தொழிலிடங்களில் தொழிலாளர் உரிமைகள், துன்புறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகம் உள்ளடங்கலாக - முகம் கொடுப்பதாக சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. இதற்கான காரணம் போதிய கல்வி மற்றும் பயிற்சி இன்மை, மொழி ஆற்றல் இன்மை மற்றும் தொழிலின் கேள்விக்கு ஈடுகொடுக்கும் ஆற்றலின்மை போன்ற பல்வகைமைமிகு பாதிப்புறு நிலையாகும். திறன்களைக் கொண்டிருப்பதே அனைத்துப் புலம்பெயர் தொழிலாளர்களுக்குமான இறுதியான பாதுகாப்பு என்பதை அரசு உணர்ந்து கொண்டுள்ளது. இக்காரணமே இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர் சமுதாயத்தின் தோற்றப்பாட்டினை மாற்றி அமைக்கும் படிப்படியானதும் உபாயகரமானதுமான அணுகுமுறையினை அரசு எடுக்கக் காரணமாயிற்று.

- குறைந்த திறன்களைக் கொண்ட தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தினை அரசு உணர்ந்து கொண்டுள்ள அதேவேளை திறன்மிகு புலம்பெயர் தொழிலாளர்களை மேம்படுத்துகின்ற ஒரு செயன்முறையினையும் மேற்கொண்டு வருகின்றது. திறன்மிகு தொழிலாளர்களுக்கு பாதுகாப்

பானதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான தொழில் சூழலில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும் புலம்பெயர்ந்து செல்ல உத்தேசித்துள்ளவர்களுக்குத் திறன்மிக்க தொழிலாளர்களாக மாறுவதற்கான பரந்த வாய்ப்பினை வழங்குவதன் மூலமும் திறன்மிகு தொழிலாளர்களின் புலப்பெயர்ச்சியினை மேம்படுத்துவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- தொழிலாளர் புலப்பெயர்ச்சிச் செயன்முறையில் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பில் இலங்கைக்கும் ஏனைய தொழில் வழங்கும் நாடுகளுக்கும் இடையில் அமையும் இருதரப்பு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் போன்றவற்றின் பாத்திரத்தை அரசு தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளது. தொழிலாளர்களை அனுப்பும் தரப்புக்கள் மற்றும் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் தரப்புக்கள் ஆகியவற்றற்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையானது தொழிலுக்கேயுரித்தான வேலை நிலைமைகளில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் போன்றவற்றை உறுதிப்படுத்த உதவுகின்றன. புலம்பெயர் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு உரிமைகளினை உறுதிப்படுத்த தொழில் தேடிச் செல்லும் நாடுகளுடன் இருதரப்பு உடன்படிக்கைகளினைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அதன் பாத்திரத்தினையும் அரசு உணர்ந்துள்ளது. இவை சர்ச்சை குறைந்தவையும் பேச்சுவார்த்தை நடத்த இலகுவானவையுமாகும்.

- தனியார் தொழில்வாய்ப்பு முகவர்களின் தவறான செயற்பாடுகள் மற்றும் தொழிலவாய்ப்பு முகவர்களின் உள்நாட்டு முகவர்களிற்கான (சப் ஏஜண்ட் என அறியப்படுபவர்கள்) ஒழுங்குபடுத்தல் சட்டத்திலுள்ள இடைவெளிகள் ஆகியன புலம்பெயர் தொழிலாளர்களிற்கு துஷ்பிரயோகமிகு மற்றும் சுரண்டல்மிகு சூழ்நிலைகளினை ஏற்படுத்தியுள்ளன. அரசினாலும், சமூகப் பங்காளர்களினாலும் சிவில் சமூக அமைப்புக்களினாலும் இவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அனைத்து வேலைவாய்ப்புச் செயன்முறைகளிலும் அரசே சகல பொறுப்புக்களையும் கொண்டிருக்கின்றது. இப்பொறுப்பானது தொழிலாளர்களை பாதுகாப்பானதும் ஒப்புரவு மிக்கதுமான தொழில் புலப்பெயர்ச்சி செயன்முறையினுள் பாதுகாத்தல் எனும் கடப்பாட்டிலிருந்து எழுவதாகும். அரசாங்கமானது அதன் சார்பிலே வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்காக தனியார் வேலைவாய்ப்பு முகவர்களுக்கு சட்டவாக்க மற்றும் ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் மூலம் அனுமதியை வழங்குகின்றது. SLBFE பல திட்டங்களைக் கொண்டிருந்தபோதிலும் அனுமதி பெறாத உப முகவர்களை (சப் ஏஜண்ட்)வகைப் பொறுப்பு உரியவர்களாக மாற்ற முடியாமல் இருப்பதானது துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் மிகு நடைமுறைகளுக்கு இட்டுச் செல்கிறது. அனுமதிபெற்ற முகவர்களைக் கண்காணிப்பதற்கான உரிய வழிமுறை இல்லாமையானது தவறான செயற்பாடுகளைக் குறைப்பதில் பெரும் சவாலாக இருக்கின்றது.

- தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளில் பல சுரண்டல்மிகு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதில் சம்பளங்களையும் கூலிகளையும் வழங்காமையும் உள்ளடங்குகின்றது. தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளுடன் உடன்படிக்கை இல்லாமை மற்றும் அமுல்படுத்தலிலுள்ள உள்ளார்ந்த பிரச்சினைகள் ஆகியன இச்செயற்பாடுகளை நிவர்த்தி செய்வதனை மிகவும் கடுமையானதாக ஆக்கியுள்ளன. புலப்பெயர்ச்சிச் செயன்முறையின் அனைத்து மட்டங்களிலும் முறைப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு பொறிமுறைக்கான தேவை இருக்கின்றது. இப்பொறிமுறை புலம்பெயர் தொழிலாளர்களின் மனித மற்றும் தொழில் உரிமைகளினை மீறுவதால் எழும் முறைப்பாடுகளைப் பெற்று விசாரணை செய்து அவற்றினை ஆற்றுப்படுத்துவதற்கான ஆணையினைக் கொண்டுள்ளதாக இருக்கவேண்டும்.

- அரசின் சனநாயக மிகு தீர்மானம் - வகுத்தல் செயன்முறையில் புலம்பெயர் தொழிலாளர்கள் பங்குபற்றுவதற்கான உரிமையினை அரசு அங்கீகரிக்கின்றது. அதேபோல வெளிநாட்டு வேலைவாய்ப்புடன் தொடர்புடைய நிறுவனங்களில் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டும் என்பதையும் அங்கீகரிக்கின்றது. தற்போது புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாட்டில் வேலைவாய்ப்பினைப் பெற்றிருக்கையில் அவர்களின் வாக்களிக்கும் உரிமையினைப் பயன்படுத்த முடியாதவர்களாகவே உள்ளனர்.

## புலபபெயாசசிச செயனமுறையின ஆளுகை

| சவாலகளும கொளகை பதிறசெயறபாடுகளும | | செயலதிட்டம |
|---|---|---|
| நிறுவனச சட்டகம | பிரதான அரச நிறுவனஙகள, வெளிநாட்டு வேலைவாயபபு ஊககுவிபபு மறறும நலனோமபுகை அமைசசு போனறவறறின வழிகாட்டலின கீழ அரசு ஓா ஒததிசைவான நிறுவனச சட்டகததின உருவாககும ஏனைய பிரதான நிறுவனஙகள இதன குறை நிரபபும.<br><br>இச சட்டகததின அடிபபடையிலான தொழிலாளா புலபபெயாசசிககான முகாமைததும மறறும நிாவாகப பொறிமுறையானது இலஙகையில புலமபெயா தொழிலாளா செயனமுறையினை வழிநடததும. | தொழிலாளா புலபபெயாசசி பறறிய தேசியக கொளகையினை அமுலபடுததும முகமாக அரசானது<br><br>1 தொழிலாளா புலபபெயாசசிச செயனமுறையில ஈடுபட்டுளள சகல முகவாகளினதும பாததிரததினை தெளிவாக வரை யறுககும.<br><br>2. புலபபெயாசசியுடன தொடாபுடைய அனைதது பிரதான அரச நிறுவனஙகளினதும பிரதிநிதிகள மறறும சமபநதபபட்ட ஏனைய அரச மறறும அரச சாாபறற நிறுவனஙகளின பிரதிநிதிகள ஆகியோரை உளளடககிய தொழிலாளா புலபபெயாசசி பறறிய ஆலோசனைக குழுவினை நிறுவும.<br><br>ஆலோசனைக குழுவிலுளள பிரதிநிதிகள வெளிநாட்டு வேலைவாயபபு ஊககுவிபபு மறறும நலநோமபுகையினைச சோநத அரசினால நியமிககபபட்டவாகள தொழிலாளாகள, தொழிற சஙகஙகள, சிவில சமூகம மறறும வேலைவாயபபுத தொழிறதுறை ஆகியவறறைச சோநத பிரதிநிதிகள ஆகி யோராவாாகள. ஆலோசனைக குழுவின பாததிரம தொழிலாளா புலபபெயாசசிச செயனமுறையினை மீளாயவு செயதல, பிரசசினைகளையும சவாலகளையும ஆராயதல, தொழிலாளா சநதையில ஏறபடும மாறறஙகளைப பின தொடரல, மேலும செயனமுறையின அனைதது அமசஙகள பறறியும ஆலோசனை வழஙகல.<br><br>ஆலோசனைக குழுவானது SLBFE இடம இருநது கிரமமான அறிககைகளைப பெறறுக கொளளும. தொழிலாளா புலபபெயாசசி நிலையின பூரண மீளாயவு இதில அடஙகும.<br><br>3. தொழிலாளா புலபபெயாசசி பறறி ஆலோசனைககுழுவிறகு மேலதிகமாக அமைசசுககள, முகவாகள, திணைககளஙகள, நிறுவனஙகள, பிாிவுகள மறறும ஏனைய அரச மறறும அரச சாாபறற பஙகடுபாட்டாளாகள சிவில அமைபபுககள மறறும தொழில சஙகஙகள போனறவறறிறகு இடையில ஒருஙகி ணைபபினை ஏறபடுததுமுகமாக அமைசசுககளுககிடையிலான |

| | | |
|---|---|---|
| | | ஒருஙகிணைபபுக குழு ஒனறினை சிவில சமூக பஙகடு பாடடாளாகளின உறுபபாணமை அநதஸதுடன அமைததல வேணடும என விதநதுரைககபபடுகிறது. |
| | கௌரவம, பாதுகாபபு மறறும ஒபபுரவு நிறைநத சூழலில புலப பெயாசசியினை உறுதிபபடுததுவதறகான பிரதான அமைபபாக SLBFE யின பாததிரததினை அரசு அஙககாிதது வலுபபடுததும. | SLBFE யின ஆணையினைப பூரணமாக அமுலபடுதது முகமாகவும குறிபபிடபபடட குறிககோளகளுககு எதிராக அதன செயலநிறைவேறறுகையினை மாியவு செயயுமுகமாக வும SLBFE யின ஆககக கூறினை பரநத அளவில மாியவு செயவது பொறுபபேறகபபடும. அதில முகாமைததுவ சபை, ஒழுஙகுபடுததல மறறும மேமபாடடுச செயறபாடுகள ஆகியன நிதிமுகாமைததுவ வாயபபுகளுடன சோதது உளளடககப படும. மாியவானது ஆணையிலுளள குறைபாடுகளை பாி சலிககும. அததுடன அவறறிறகான பாிகாரததிறகான விதப புரைகளையும வழஙகும. கிரமமான மறறும ஆவணபபடுததப படட புலபபெயாசசியினை மேமபடுததுமுகமாகவும. புலம பெயா தொழிலாளாகளினதும அவாகளது குடுமபஙகளினதும பாதுகாபபு மறறும நலநோமபுகையினை மேமபடுததுமுகமாக வும SLBFE ககு வழஙகபபடடுளள தறபோதைய ஏறபா டுகளை அரசு அதிகாிககலாம.<br><br>இதறகு மேலதிகமாக தொழிலாளா சநதைத தேவைகள மறறும கேளவிகள ஆகியவறறைப பகுபபாயவு செயதல மேலும SLBFE யின பரபபெலலையினுள வருகினற தொழிலாளா சநதை வாயபபுகளுககான பாதுகாபபான மறறும ஆககததிறனமிகக பதிறசெயறபாடுகளை ஆராயதல ஆகியனவும அமுலபடுததபபடும. |
| | தொழிலாளா புலபபெயாசசிச செயனமுறையின வேலைவாயபபு அமச மானது ஆடசி மறறும வகைபபொறுபபு ஆகிய சடடகததினுள ஒழுஙகு படுததபபடடு முகாமைததுவம செயயபபடும. நிாவாகக கொளகைகள மறறும செயலவிதிகள, அனுமதிபபததிரம வழஙகும திடடஙகள, நடததைக கோவைகள மறறும கணகாணிபபு மறறும குறறஙகளுககு நடவடிககை எடுபபதறகான குழாமின ஏறபாடுகள மூலமாக அரசானது வேலைவாயபபு தொழிலதுறையை ஒழுஙகுபடுததும. | செயனமுறையின துஷபிரயோகததினைத தடுககுமுகமாக புலமபெயா தொழிலினை ஆளுமை செயகினற சடடததின ஏறபாடுகளினால உருவாகி விாிவடைகினற தெளிவான வழி காடடுதலகள உருவாககபபடும. செயனமுறையில மேற கொளளபபடும துஷபிரயோகமானது தொழிலாளா உாிமை மறறும பாதுகாபபு பாரதூரமாக மறபபடுதலிறகு இடடுச செலகிறது. இதறகான காரணம செயனமுறையில உளள ஒழுஙகீனம அலலது இடைவெளியாகும. இவை அடையாளம காணபபடடு இறுககமானதும பூரணமானதுமான வழிகாட டலகள வேலைவாயபபுககாக உருவாககபபடலாம. |

| | | |
|---|---|---|
| | | இதிலே வேலைவாயபபு முகவாகளினால மேறகொளளபபடும தவறான செயறபாடுகளை தடுதது நிறுததுவதறகான செயற திறன மிகு நடவடிககைகள உளளடஙகும. அவையாவன: அனுமதிபபததிரம வழஙகுதல, கணகாணிததல, மறறும அறிககையிடல, அதேபோல ஏறறுக கொளள முடியாத சூழநிலைகளுககு இடடுச செலகினற வேலைவாயபபுச செயனமுறைகளில மேறகொளளபபடும தவறுகளுககு தணடம விதிததலும இதில அடஙகும.<br><br>வேலைவாயபபிறகான ஒரு தெளிவான ஆணை உருவாககப படும. தொழிலாளாகளை அனுபபுதல தொடாபான அரசாங கததிறகும முகவர்களுககும இடையிலான உடனபடிககையில அரசின பாததிரம, ஏனைய அனைதது வகையிலான வேலைவாயபபிலும தனியாா வேலைவாயபபு முகவாகளின பாததிரம ஆகியன தெளிவாக நிாணயிககபபடும.<br><br>வழிகாடடலானது வேலைவாயபபு முகவாகளையும அதே போல இதுவரையில அனுமதிப பததிரம பெறாத உப முகவாகளையும ஆளுகைககுடபடுததும.<br><br>அனுமதிப பததிரம பெறற வேலைவாயபபு முகவாகளினால உருவாககபபடட தறபோதைய நெறிககோவை மறறும செயனமுறைக கோவை ஆகியனவும அவறறிறகான அமுலபடுததலும மளாயவு செயயபபடடு வலுபபடுததபபடும.<br><br>அரசவேலைவாயபபுத தொழிறதுறை மறறும தனியாா வேலை வாயபபுத தொழிறதுறை (பிரதிநிதிகள அலலது உபமுகவா கள ஆகியோாின பாததிரம உளளடஙகலாக) ஆகியவறறை உளளடககிய வேலைவாயபபு தொழிலதுறையின ஒழுஙகு படுததலுககான தராதரஙகளை நிாணயிததவராக, தெளிவான தும பாிபு,ரணமானதுமான வேலைவாயபபு கொளகை உரு வாககபபடும கடடாயமான பதிவு ஒழுஙகுபடுததல மறறும தனியாா வேலைவாயபபு முகவாகளின பாததிரம மறறும செயறபாடுகளின அனைதது அமசஙகளையும ஆளுகை செய தல ஆகியவறறிறகான ஒழுஙகுவிதிகளை வேலைவாயபபுக கொளகை நிாணயிககும. மேலும கடபபாடடினையும வகைப பொறுபபினையும மேமபடுததுவதறகாக உாிய கணகாணிபபுச செயனமுறையினை அமுலபடுததும. அததுடன சடடவிரோத நடவடிககைகளுககு கூடுதலான தணடததினையும விதிககும. |

| | | |
|---|---|---|
| | தொழிலாளாகளைப பெறறுக கொளகினற பரதான நாடுகளிலுளள அனைதது ராஜதநதிர அலுவலகஙகளிறகும பொருநதுகினற ஒருஙகிசைவான செயலவிதிகள, நடைமுறைகள மறறும வழிகாடடலகள அடஙகிய சடடகம ஒனறு இருககும.<br><br>ராஜதநதிர அலுவலகஙகளின ஆணையானது இஙகே குறிபபிடபபடடுளள சடடகததினை அடிபபடையாகக கொணடிருககும அவறறிறகு உதவி வழஙகும ( நிதி வழஙகலிறகாக, மனித வளஙகள ஒழுஙகுபடுததல மறறும வழிகாடடலகள மறறும ஒருஙகிசைவான பொறிமுறைகள மறறும பரநத அடிபபடையிலான சேவைகள எனபவறறிறகாக). | பூாவாஙக மதிபபடு ஒனறு மேறகொளளபபடும. அதனைத தொடாநது கிரமமான மதிபபடுகள மேறகொளளபபடும. இமமதிபபகளின நோககம இலஙகைப புலமபெயா தொழிறபடையினருககு வழஙகபபடும சேவைகள போதியதாக உளளதா எனபதை அறிவதும அவாகளின பாதுகாபபு மறறும நலநோமபுகைகளை நிறைவேறறுவதறகான இராஜதநதிர அலுவலகஙகளின தலைமையை மதிபபிடுவதும. இதிலே பதிறசெயறபாடு ஆறறாத இராஜதநதிர அலுவலகஙகளிறகு எதிராக தொழிலாளா முறைபபாடு செயவதை இயலுமாககு வதறகாக துயரம - பாிகாரம பொறிமுறையினை மதிபபிடல உளளடஙகும. மதிபபடடின அடிபபடையிலான பினதொடரல விதபபுரைகள அமுலபடுததபபடும. |
| **சடடவாககச சடடகம** | புலமபெயா தொழிலாளாகளுககும அவாகளது குடுமபஙகளுககும உயா தரததிலான பாதுகாபபினை வழஙகுவதறகாக வெளிநாடடு வேலை வாயபபு கொளகை நிறுவனததிறகு ஆணைவழஙகுவதறகாக சடடததினை பரநததாக ஆககுவதறகாக தொழிலாளா புலபபெயாச சிககான அரச கொளகையினை விஸதாிபபது தொடாபாக சடடவாகக ஏறபாடுகளிலுளள இடைவெளி தாககபபடும. இவறறில ஒழுஙகு விதிகள, சேவை வழஙகல, வகைபபொறுபபு மறறும கணகாணிபபு பிரசசினைகள தொடாபாக சடடததில உளள இடைவெளிகளை அகறறுவது உள ளடஙகும. | தறபோதுளள SLBFE சடடததில உளளடஙகியுளள சடட வாகக ஏறபாடுகள பறறி மீளாயவு மேறகொளளபபடும. தொழிலாளா புலபபெயாசசி பறறிய அரச கொளகையின அனைதது அமசஙகளையும உளளடககுவதறகாகவும புலப பெயா தொழிலாளாகள பறறிய சாவதேச தராதரஙகளுககு அரசின கடபபாடடினை மேமபடுததுவதறகாகவும திருததஙகள மேறகொளளபபடும. |
| **சாவதேச சடடகம** | அனைதது புலமபெயா தொழிலாளாகள மறறும அவாகளின குடுமபஙகளின உாிமைகளினைப பாதுகாததல தொடாபான சாவதேச சமவாயஙகளை இலஙகை ஏறறுக கொணடமை மூலம பிரதிபலிககினற சாவதேச மனித உாிமைகள மறறும சுதநதிரஙகளிறகான அதன கடபபாடானது தொழிலாளா புலபபெயாசசியான ஆளுகை செயயும சடடஙகளுககு திருததஙகள செயவதன மூலம தேசிய சடடவாககஙகள மறறும நடைமுறைகளில பூரணமாக பிரதிபலிககச செயயபபடும. | ஐஎலஓ புலமபெயா தொழிலாளா சமவாயஙகளை ஏறறுக கொளவதிலுளள தடைகளை ஆராயவதறகாகவும அத தடைகளை எதிாகொளவதறகான முறைகளை அடையாளம காணபதறகாகவும சடடவாககததின மீளாயவின பகுதியாக அமையும மீளாயவு ஒனறு மேறகொளளபபடும.<br><br>மீளாயவின அடிபபடையில புலமபெயா தொழிலாளா பறறிய ஐஎலஓ சமவாயஙகளில இரணடினையோ அலலது ஒனறி னையோ (97 மறறும C 143) அரசு ஏறறுக கொளளும அததுடன அவறறின ஏறபாடுகளை தேசிய சடடவாஙகளிலும நடைமுறைகளிலும ஏறறுக கொளளும. |

| | | |
|---|---|---|
| **ஒழுஙகுபடுததல சடடகம** | திறன அபிவிருததி மறறும அதிகாிபபிறகான வாயபபினை அனைதது பிரஜைகளும பெறறுக கொளளக கூடியதாக ஆககி, திறனமிகு தொழிலாளாகளின புலமபெயாசசியை அரசு மேமபடுததும. | வெளிநாடடில கேளவி இருககும பரபபுகளில திறனகளை வழஙகுவதில தனியாாதுறை ஆறறும முககியமான பாததி ரததை அரசு அஙககாிககும. தரம மறறும அஙககாரததை உறுதிபபடுததுவதறகாக இது ஓா அரச ஒழுஙகுபடுததல சடடகததின கழ மேறகொளளபபடும.<br><br>இலஙகை புலமபெயா தொழிலாளாகளின தோறறபபாடடினை மாறறுவதறகான சடடகததின அடிபபடையாக திறனமிகு தொழிலாளாகளிறகான கேளிவியை மதிபபிடுமுகமாக கிரமமான தொழில சநதைக கணிபபடுகளும சநதைப பகுபபாயவும மேறகொளளபபடும.<br><br>திறனமிகு தொழில வாயபபினை பெறறுக கொளளுமுகமாக குறைவான திறனமிகு தொழிலாளாகளின ஆறறலை அதிகாிககுமுகமாக ஒரு ப,ரணமான பயிறசிததிடடம உருவாக கபபடடு அமுலபடுததபபடும. இததிடடமானது SLBFE யினால தறபோது மேறகொளளபபடடுவரும பயிறசிகளையும இலஙகையில தொழிறபயிறசியினை வழஙகுவதில ஈடுடடுளள அனைதது முகவாகளையும உளளடககும. |
| | புலமபெயா தொழிலாளாகளின உாிமைகளைப பாதுகாககும அதேவேளை அரசு வெளிநாடடு வேலைவாயபபினை மேமபடுததும. | தொழிலாளாகளைப பெறறுக கொளளும அனைதது நாடுக ளுடனும அரசு இரு தரபபு உடனபடிககைகளை மேமபடுத தும. பேசசுவாாததைகளை நடததும. இரு தரபபு உடன படிககை இலலாதவிடதது அரசானது ப,ரணமான புாிநதுணாவு உடனபடிககைககு கணகாணிபபு மறறும வகைபபொறுபபுடன இயைபுறும.<br><br>அனைதது இருதரபபு உடனபடிககைகளையும புாிநதுணாவு உடனபடிககைகளையும கணகாணிபபது தொழிலாளா புலபபெயாசசிககான ஆலோசனைக குழுவின பாததிரமாகும.<br><br>வேலை தேடிசசெலலும நாடுகளிலுளள தொழில தருநா (தனியாா மறறும அரச) உளளிடட அனைதது பஙகுடுபாடடா ளாகளினதும சமூகக கலநதுரையாடல மறறும பஙகேறபு மூலமாக ஒரு மாதிாி ஒபபநதம உருவாககபபடும.<br>இதறகாக தறபோதுளள மாதிாி ஒபபநதஙகள விாிவாககபப டும. இநத ஒபபநததில குறிபபிடட சூழநிலைககு தகவமைத துக கொளளல கருததில கொளளபபடும. ஆனால குறைநத படச தராதரஙகளும ஏறபாடுகளும விடடுக கொடுககபபட மாடடாது. |

| | | |
|---|---|---|
| | சகலவிதமான தொழிலாளாகளும தமது திறனகளை மேமபடுததிக கொளவதறகான உதவிகளை அரசாங்கம வழஙகவேணடும. இதன பொழுதே குறைவான திறனகளையுடைய தொழிலாளாகளின திறனவிருததி தொடாபில விசேட கவனம செலுததவேணடும். | தறபோது இலஙகை வெளிநாட்டு வேலைவாயபபு பணிய கததினால வழஙகபபடுகினற பயிறசிகள சுதநதிர நிபுணததுவ குழுவொனறினால மளாயவு செயயபபடல வேணடும். இவ அறிககையை மையமாகக கொணடு சகலவிதமான தொழிலா ளாகளும குறிபபாக குறைவான திறனகளையுடைய தொழி லாளாகள தமது திறனகளை விருததி செயயக கூடிய வித்த தில பயிறசிகள தரமுயாததபபடடுளளன எனபதை உறுதி செயது கொளளவேணடும.<br>வெளிநாட்டு வேலைககான பயிறசிகளை இ.வெ.வே.ப. மேறபாாவை செயயும.<br>பயிறசி நிகழசசித திட்டஙகளை உருவாககி அவறறை நடைமுறைபபடுததுவது தொடாபான விடயஙகளை தனியாா துறையினருடனும தேசிய பயிறசி நிறுவனஙகளுடனும சோநத முறை சாாநத தொடாபுகளை அமைசசு உருவாககும. இதன காரணமாக இபபயிறசிகள தராதரமுடைய பயிறசி நிகழசசித திட்டஙகளாகவும மதிபபடுத திட்டஙகள, சானறிதழகள ஆகியவறறைக கொணடதாக அமைவதுடன தேசிய ரதியான அஙககாரமுடையவையாகவும மாறுகினறன.<br>மூனறாம நிலைககலவி மறறும தொழிற கலவி ஆணைககுழு (TVEC) (மூ.நி.தொ.ஆ) இபபயிறசிகளுககான உயா அமைப பாகத திகழும. பயிறசி தராதரஙகளை நிாணயிபபதறகும, புலமபெயாநத தொழிலாளாகளுககான தேசிய தொழிறபயிறசி தகைமைத தேவைபபாடுகளையும திறனகள மதிபபடு,நாடு திருமபுகினற பொழுது மீணடும வேலைககமாததபபடுவதற கான தோசசிகள ஆகியவறறை மூ.நி.தொ.ஆ உடன இணைநது இ.வெ.வே.ப. மேறகொளளும. |
| | புலமபெயாநத தொழிலாளாகள வேலைககமாததபபடும பொழுது அவாகளுககு நதியான, போதியளவு ஊதியம கிடைபபதை உறுதிசெயவறகான நடவடிககைகளை அரசு மேறகொளள வேணடும. | சகலவிதமான புலமபெயா தொழிலாளாகளும பெறறுக கொளளககூடிய ஆகக குறைநத சமபளததை குறிபபிட்டு சமபளம தொடாபான தெளிவான கொளகையொனறை அரசு வெளியிடவேணடும்.<br>தெறகாசிய பிராநதியஙகளிலிருநது புலமபெயாகினற தொழி லாளாளுககு வழஙகபபடுகினற பலவேறு மட்டஙகளிலான சமபளததை கருததிறகொணடு இஙகு நிலவுகினற போட்டி யைத் தடுபபதறகாக மட்டுபபடுததபபட்ட தொழிலாளா வெளி யேறறம உளளடஙகலாக பலவேறு வகையான தொழிலாளா களுககாக சமபளக கட்டமைபபொனறை உருவாககுவதற காக சாாக நாடுகளுடன பேசசுவாாததையை அரசாஙகம ஆரமபிகக வேணடும. |

| | | |
|---|---|---|
| | தொழில புலமபெயாவுகளின பலவேறு மடடஙகளில நடைபெறுகினற வனமுறைகள, துஷபிரயோகஙகள தொடாபில பொருததமான பாிகார பொறிமுறைகளுடன அரசு செயறபடவேணடும. | ஆலோசனைக குழு அமைசசுககளுககிடையிலான குழுககள ஆகியவறறின கலநதாலோசனையுடனும அரசாஙகம தொழில வழஙகுநா அமைபபுகள, தொழிலாளா அமைபபுகள, சிவில சமூகம ஆகியவறறின பஙகளிபபுடன முறையிடல பொறி முறையொனறு விருததி செயயபபடடு நடைமுறைபபடுததபப டும. தொழில புலபபெயாவு நடைமுறைகளின பொழுது ஏறபடுகினற குறைபாடுகள, துஷபிரயோகஙகள, உாிமை மறலகள தொடாபில செயறபடுததுவதறகு பூரணததுவமிகக வரைவுச சடடகததை அடிபபடையாக கொணடு இநத முறைப பாடடு பொறிமுறை அமையும. மேறபடி பஙகுதாராகளினால இபபொறிமுறைககான செயலாறறு நியதிகள, யாபபு, நியமன நடைமுறைகள, செயறபாடுகள, வகிபாகஙகள, நிாவாகப பொறிமுறைகள போனறன உருவாககபபடும.<br><br>இ.வெ.வே.ப. சடடததில தறபோது காணபபடுகினற நடை முறைகளை மிளாயவு செயது அதனை ஓா சுதநதிர அமைப படம ஆறறுபபடுததுவது முறைபபாடடு பொறிமுறையின பிரதான செயறபாடாகும. இவமுறைபபாடடு பொறிமுறையி னுள நதியைப பெறறுக கொளவதறகான வழிமுறைகள, மாறறடடு பிரசசினை தாவு பொறிமுறைகள (இணகக சபைகள) போனறன உளளடககபபடும.<br><br>வேலைககுச செலகினற நாடடிலும இக கொளகைகளை விாிவுபடுததுவதறகுத தேவையான நடவடிககைகள மேறகொளளபபடும. |
| | ஆடகளை வஞசகக கடததலில ஈடுபடுததல, மனிதாகளை கடததுதல போனறன புலமபெயாதல எனற பெயாில நடைபெறறால அதனைத தடுப பதறகுாிய வழிமுறைகளையும பாிகார வழிமுறைகளையும அரசு மேற கொளள வேணடும. (இதனைத தடுபபதறகு தறபோது காணபபடுகினறன சடடஙகளையும பிரயோகிததல இவறறுள உளளடஙகும). | முறையறற புலபபெயாவுகள ஆடகளை வஞசக கடததலுக குடபடுததல, புலபபெயாவு எனற பெயாில மனிதாகளை கடத துதல போனற நிலைமைகளை மிளாயவு செயவதறகான பொறுபபு ஏறறுக கொளளபபடும. மேலும இலஙகையில வஞசக கடததல தொடாபான சடடஙகளை நடைமுறைப படுததுவது தொடாபான விதபபுரைகள மேறகொளளபபடும. |
| **ஆடசியில புலமபெயா தொழிலாளாகளின பஙகேறபு - புலமபெயா தொழிலாளாகளின வாககுாிமை.** | சகல புலமபெயா தொழிலாளாகளும தமது வாககுாிமையை பிரயோ கிபபது அவாகளது அடிபபடை உாிமையென அரசு அஙககாிபபதுடன அதனை பேணுவதறகு காததிரமான நடவடிககைகளை மேறகொளள வேணடும. | இலஙகையைச சோநத புலமபெயா தொழிலாளாகள வெளி நாடடில வேலை செயது கொணடே தமது வாககுகளைப பிரயோகிககினற செயறபாடடை இலகுபடுததுமுகமாக சகல தோதல நடைமுறைகள தொடாபான தேவைபபாடுகள பறறிய மதிபபிடொனறு மேறகொளளபபடடு நடைமுறைபபடுததபபடும. |

# புலம்பெயர்ந்த தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாதுகாத்தலும் வலுவூட்டலும்

புலம் பெயர்ந்த தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாதுகாக்கும் அடிப்படைப் பொறுப்பை அரசு ஏற்கின்றது. எல்லா புலம்பெயர்ந்த தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களின தும் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி ஒப்புதல் அளிக்கப்பட்ட சர்வதேச சமவாயத்தில் பட்டியலிடப் பட்டுள்ள கடப்பாடுகளின் அடிப்படையில், தொழிலுக் காகப் புலம்பெயரும் இலங்கையர்களின் உரிமைக ளையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கு அரசு அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது.

இந்தப் பொறுப்பானது உள்நாட்டு, வெளிநாட்டு; ஒழுங்குபடுத்தப்பட்ட, ஒழுங்குபடுத்தப்படாத; தொழி லுக்கான முழுமையான பாதுகாப்பளித்தல், முழுமை யான தொழில் வாய்ப்பை மேம்படுத்தல், எல்லோ ருக்கும் சமமான தொழில்வாய்ப்புகள், மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு போதிய, காலத் துக்கு உகந்த சமூக, பொருளாதார, சட்ட சேவை களை வழங்குவதற்கான அரசின் அர்ப்பணிப்பு என பொருள் கொள்ளப்படுகின்றது.

அவ்வாறாக, புலம்பெயர்ந்த தொழிலாளர்களான ஆண்களும் பெண்களும் பக்கச்சார்பு, சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றினால் பாதிக்கப் படக்கூடிய நிலையை அரசு உணர்கின்றது. குறை வான திறன்களைக் கொண்டவையாக வகைப்படுத் தப்பட்ட, குறிப்பாக பெண் தொழிலாளர்களைக் கொண்ட போதியளவு ஒழுங்குபடுத்தப்படாத தொழில்துறைகளில் தான் இவ்வாறு இருப்பதாக அரசாங்கம் அடையாளம் காண்கின்றது.

புலம் பெயர்தல் நடவடிக்கையின் புறப்படுதலுக்கு முந்திய (தீர்மானம் மேற்கொள்ளுதல் முதல் புலம் பெயர்வதற்குத் தயாராவதற்காகப் பயிற்சி பெறுதல் வரை); சேவைக்கால (தொழில் பெற்றுள்ள தொழிலாளர்களும் அவர்கள் விட்டுச் சென்றுள்ள குடும்பங்களும்) திரும்புதலும் ஒருங்கிணைதலும் (மீள் ஒருங்கிணைப்பைக் கவனத்தில் கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பாராட்டுதல்) ஆகிய மூன்று கட்டங்களிலும் புலம் பெயர்ந்த தொழிலா ளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பாது காத்து வலுவூட்டுவதில் தனது பாத்திரத்தை அர சாங்கம் உணர்கின்றது. புலம் பெயர்ந்த தொழிலா ளர்களின் பாதிக்கப்படக்கூடிய பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய உறுதியான அர்ப்பணிப்பை அரசாங்கம் கொண்டுள்ளது.

அரசு துஷ்பிரயோகச் செயல்களைத் தடுத்து புலம் பெயர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சுதந் திர, சமத்துவ, பாதுகாப்பு மற்றும் மனித மாண்பு ஆகிய விடயங்களில் சீரானதும் ஆக்கபூர்வமானது மான பணிகளை மேற்கொள்ளும்.

ஊழிய புலம் பெயர்வு, மற்றும் சர்வதேச சாதனங் கள் பற்றி ILOவில் சொல்லப்பட்டவாறு அடிப்படை மனித உரிமைகள், புலம் பெயர்ந்தோரின் விசேட உரிமைகள், வேலைத்தலங்களில் ஊழிய உரிமை போன்ற பல்வேறு உரிமைகளுக்கு புலம் பெயர்ந்த ஊழியர்கள் உரித்துடையவர்கள் என்பதை அரசு உணர்கின்றது.

தனது எல்லைகளுக்கு அப்பால் இடம்பெறும் உரிமை மீறல்களையும் புலம் பெயர்ந்த தொழிலா ளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மூலங்க ளுக்கும் விட்டுச் செல்கின்ற மற்றும் சென்றடை கின்ற நாடுகளுக்கும் இடையில் பகிரப்பட்ட பொறுப்பு இருப்பதையும் அது உணர்கின்றது.

## பாதுகாப்பு மற்றும் வலுவூட்டலுக்கான பிரதான விடயங்கள்

- புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சேம நலன் கோட்பாடுகளை அங்கீகரிப்ப தில் ஊழிய புலம் பெயர்வின் தயார்படுத்தல் கட்டத்தில் அரசு தற்போது விரிவான சேவை களை ஆற்றுகின்றது. ஆயினும், புலம் பெயர்வுக் குத் தயாராகும் வேறுபட்ட கட்டங்களில், அதாவது, ஆட்சேர்ப்பு, பயிற்சி, பதிவு செய்தல் மற்றும் உண்மையாகப் புறப்படுதல் ஆகியவற் றில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள், சுரண்டல் சூழ்நிலைகள், மற்றும் துஷ்பிரயோகங்களை எதிர் நோக்குகின்றனர்.

- தாழ்ந்த மட்டக் கல்வி, மொழித்தேர்ச்சி இன்மை (தாய் மொழி நீங்கலாக) ஆகிய சிறப்பம்சங்க ளைக் கொண்ட இலங்கையின் குறைந்த திறன் கொண்ட புலம் பெயர்ந்த 21 வயதுக்குக் குறைந்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற் படை வேலைத்தலத்தில் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோக நிலைமைகளுக்கு மிகவும் உட்படக்கூடியதாகும். ஊழியர்களின் சேம

நலன்களையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்து வதற்காக புலம்பெயரும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச தேவைப்பாடுகளை வகுப்பதை அரச கொள்கை தேவைப்படுத்துகின்றது.

- தொழிலுக்காகப் புலம் பெயர்தல் பற்றிய தகவல் வழங்கப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளும் சூழ் நிலை இல்லாமை தொழிலாளர்களுக்கு தனிப் பட்ட மற்றும் சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்து கின்றது. குறிப்பாக, குறைவான திறன்களைக் கொண்ட பிரிவைச் சேர்ந்த சில பிரஜைகள் தனிப்பட்ட மற்றும் குடும்ப அக்கறைகள், வாழ்க் கைத் துணைவர் மற்றும் பிள்ளைகள், விரிவ டைந்த குடும்பங்கள் மற்றும் புலம்பெயர்ந்த ஊழியர்களான தங்களுடைய உரிமைகள் ஆகி யவற்றில் அதன் வெகுவான பாதிப்புகளைக் கவனத்தில் கொள்ளாமலும் புலம் பெயர்வதற் குத் தீர்மானிக்கலாம். இது பெரும்பாலும் தொழி லுக்காகப் புலம் பெயர்தல் பற்றிய நம்பத்தகுந்த தும் பரவலானதுமான தகவல்கள் கிடைக்காமை மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடியவர்கள் தகவல் களையும் ஆதரவு சேவைகளையும் பெறுவதில் உள்ள சிரமம் ஆகியவற்றினால் ஏற்படுகின்றது.

- அரசாங்க ஆட்சேர்ப்பு முகவராண்மைகள், தனி யார் ஆட்சேர்ப்பு முகவராண்மைகள். முறைசாரா வலையமைப்புகள், உறவினர் மற்றும் குடும்பத்தி னர் மற்றும் மிகக்குறைவான சந்தர்ப்பங்களில் நேரடியாக தொழில் வழங்குநர் ஆகிய பல்வேறு வழிகளில் ஆட்சேர்ப்பு இடம்பெறுகின்றது. ஆட் சேர்ப்பு நடவடிக்கையில் புலம் பெயர்பவர்க ளுக்கு பல்வேறு ஆபத்துகளும் இடர்களும் ஏற் படலாம். கட்டணங்களை மிகையாக அறவிடு தல், கடன் ஒப்பந்தங்கள், போலி ஆவணங்க ளைத் தயார் செய்தல், குறைவான வயதுடைய வர்களை (18 வயதுக்குக் குறைந்தோர்) ஏமாற்றி வெளிநாட்டுக்குத் தொழிலுக்கு அனுப்புதல், தொழிலின் தன்மை மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக நேர்மையின்றி நடந்துகொள்ளல், ஒப்பந்தப் பதிலீடுகள் போன்றவற்றை அது உள் ளடக்குகின்றது. புறப்படுவதற்கு முந்திய கட்டத் தின்போது வெளிநாட்டில் தொழில் புரிவதற்கான போதிய ஆயத்தம் மேற்கொள்ளப்படுவதும் இல்லை. அத்துடன் புலம் பெயரும் சிலர் அத்த கைய பயிற்சியிலிருந்து பயன் பெறும் ஆற்ற லைக் கொண்டிருப்பதும் இல்லை. ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் துஷ்பிரயோகம் அடிப்படையாக ஆட்சேர்ப்பு முகவரிலிருந்து ஆரம்பிக்கின்றது. ஆட்சேர்ப்பு முகவர்களையும் உரிமம் பெற்ற வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு முகவர்களின் (ALFEA) சங்கங்களையும் ஒழுங்குபடுத்துவ தற்கு அரசு முயற்சிக்கின்றபோதிலும், சில ஆட் சேர்ப்புகள் முகவராண்மைகளாலும் உரிமம் பெறாத தொழில் வாய்ப்பு முகவராண்மைகளா லும் முகவர்களாலும் ஒழுங்கற்ற நடவடிக்கை கள் தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றன.

- ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் உப-முகவர்களின் பாத்திரம் துஷ்பிரயோகத்துக்கும் சுரண்டலுக்கு மான பிரதான காரணங்களாகும். உரிமம் பெற்ற ஆட்சேர்ப்பு முகவர்களுடன் முறைசார் தொடர் புகள் எதுவுமின்றி சமுதாய மட்டத்தில் பணி புரியும் உரிமம் பெறாத உபமுகவர்கள் சுரண் டல் மிக்கதும் துஷ்பிரயோகமானதுமான தொழில் வாய்ப்பிற்காக ஆடைகளை விலைப் படுத்தலை உள்ளிட்ட மேலே சொல்லப்பட்ட துர் நடத்தைகளிலும் மீறல்களிலும் ஈடுபடுகின்றனர்.

- காப்புறுதித் திட்டம், ஓய்வுதியத் திட்டம் மற்றும் புலம் பெயர்ந்தவர்கள் நாட்டுக்குச் செய்யும் பங்களிப்பைக் கௌரவித்து அவர்களின் பிள் ளைகளுக்கு கல்விப் புலமைப் பரிசில்களையும் ஏனைய சேவைகளையும் வழங்குதல் போன்ற பரந்த பயன்களும் சேவைகளும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அரசினால் அளிக்கப்படு கின்றது. நீண்டகால சமூக, பொருளாதார பாது காப்பைக் கவனத்தில் கொண்டு அதனை முறை மையான ஒரு திட்டத்தில் வெளியிட வேண்டிய தேவை உள்ளது.

- கடந்த சுமார் ஒரு தசாப்தத்துக்கு மேலாக, தொழிலாளர்கள் தமது பணியை ஆற்றுவதற்கு தயாராக இல்லாவிடின் நாட்டை விட்டு வெளியேறாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சி, தயார்படுத்தல், பதிவு செய்தல் மற்றும் ஏனைய சேவைகளை உள்ளிட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை வெளிநாட்டு தொழில்வாய்ப் புக்காகப் புலம் பெயர்பவர்களைத் தயார்படுத்து வதற்கு SLBFE அறிமுகம் செய்துள்ளது. எனி னும் அத்தகைய "எட்டச்செய்தல்" நிகழ்ச்சித் திட்டங்களை குறிப்பாக செல்ல வேண்டிய நாடு களில் நடைமுறைப் படுத்துவதிலும் வலுவூட்டுவ திலும் திட்டவட்டமான வரையறைகள் உள்ளன.

- குறிப்பாக குறைவான திறன்களைக் கொண்ட பிரிவைச் சேர்ந்த புலம் பெயர்ந்த தொழிலா ளர்கள் உணர்வு ரீதியான, மற்றும் பாலியல் சுரண்டல், குறைவான உற்பத்தித்திறன் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு அவர்களை உட்ப டுத்தப்கூடிய தனிமை, கலாசார அதிர்ச்சி மற்றும்

பிரிவு காலணமாக உளவியல் பிரச்சினைகளி னால் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக குறைந்த திறன்களைக் கொண்ட பிரிவைச் சேர்ந்த புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் வெளிநாட்டில் தொழில் புரிவதற்கான உளவியல் தயார்படுத் தலின் தேவை பற்றி அறியாதுள்ளனர். இதற்கு தொழிலாளர்களைத் தயார் செய்வதற்காக புலம் பெயரும் வாய்ப்புள்ள தொழிலாளர்கள் புலம் பெயர்வதற்காக போதிய உளவியல் தயார்படுத் தல்களைப் பெறுதல் வேண்டும்.

- புலம் பெயரும் நடவடிக்கையுடன் தொடர்புடைய சுகாதாரப் பிரச்சினைகள் புறப்படுவதற்கு முந்திய கட்டத்தில் ஆரம்பித்து அடிப்படையான அழுத்தத் தைத் தேவைப்படுத்துகின்றது. குறைவாக ர்ஜஏ காணப்படும் நாடுகளிடையே இலங்கை பட்டிய லிடப்பட்டிருப்பினும் கூட, புலம் பெயர்ந்தவர்கள் எதிர்நோக்கிய HIVயினால் பாதிக்கப்படும் நிலை முக்கியமான ஒரு பிரச்சினையாகும். HIV தொற் றுக்கான நேரடியான ஒரு இடர்க்காரணியாக புலம்பெயர்வு இல்லாதுள்ள அதேவேளை, புலம் பெயரும் தொழிலாளர்கள், குறிப்பாக குறிப் பாகப் பாதிக்கப்படக்கூடிய பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் காரணிகள் உள்ளன. புறப்படுவதற்கு முன்னரான SLBFEயின் பயிற்சி அதன் முக்கிய ஒரு கூறாக HIV பற்றிய கல்வியையும் உள்ளடக்குகின்றது.

- தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆட்களை விலைப்படுத்தலில் சம்பந்தப்பட்டவர்க ளுக்கு சட்ட நடவடிக்கை முறைகளையும் தண்ட னைகளையும் வலுவூட்டும் நோக்குடன் அரசு நிவர்த்திக்க வேண்டிய பாரதூரமான பிரச்சினை புலம் பெயரும் நடவடிக்கையில் ஆட்களை விலைப்படுத்தலும் கடத்துதலும் ஆகும்.

- புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைக ளைப் பாதுகாத்து துயருக்கு உள்ளான அல்லது சிரமங்களில் சிக்கியுள்ள புலம் பெயர்ந்த இலங் கைத் தொழிலாளர்களை மீண்டும் சொந்த நாட் டுக்கு அனுப்புதல் உள்ளிட்ட உடனடி உதவி களை வழங்குதல் தமது அடிப்படைக் கடமை என தொழில் புரியும் நாட்டில் உள்ள இலங் கையின் இராஜ தந்திர தூதரகங்கள் உணர்தல் வேண்டும். புலம் பெயர்ந்த தொழிலாளர்களைப் பாதுகாப்பதிலும் அவ்வாறே, புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களின் கண்ணியம், அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை மதித்து அவர்களின் சேம நலன்களை மேம்படுத் துவதிலும் இலங்கையின் தூதரகங்களும் அவற் றின் ஆளணியினரும் பிரதான பங்கு வகித்தல் வேண்டும்.

[13]வீட்டுப் பணிப்பெண்களைத் தவிர இவ்வகையான வகைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வேறு திட்டவட்டமான தொழில்களை இ.வெ.வே.வா.ப. வரைவிலக்கணப்படுத்தவில்லை. (உ+ம்) ‘திறன்’ எனும் பொழுது அது தொழில்வாண்மை படைத்த குழுக்களையும், மத்திய குழுக்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். மேலும் மனிதவலு மட்டத்திலிருந்து திறன் மட்டம், திறனற்ற மட்டத்திலிருந்து குறைவான திறன் மட்டம் வரையான மாற்றம் என்பதும் இங்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மனித சக்தி மட்டங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஆண்களின் புறப்பாடு 1994 - 2007

| Year | தொழிலாண்மை மட்டம் | | இடைமட்டம் | | எழுதுவினைஞர் தொடர்புடையது | | திறனுடையோர் | | குறைத்திறன் | | திறனின்மை | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | |
| 1994 | 244 | 1.49 | 787 | 4.81 | 1,408 | 8.60 | 7,133 | 43.55 | - | - | 6,805 | 41.55 | 16,377 |
| 1995 | 837 | 1.82 | 2,074 | 4.51 | 4,088 | 8.88 | 19,431 | 42.22 | - | - | 19,591 | 42.57 | 46,021 |
| 1996 | 556 | 1.29 | 1,635 | 3.79 | 2,894 | 6.71 | 19,387 | 44.97 | - | - | 18,640 | 43.24 | 43,112 |
| 1997 | 534 | 1.42 | 1,386 | 3.69 | 3,008 | 8.01 | 15,832 | 42.16 | - | - | 16,792 | 44.72 | 37,552 |
| 1998 | 655 | 1.22 | 2,512 | 4.66 | 4,054 | 7.53 | 22,093 | 41.01 | - | - | 24,553 | 45.58 | 53,867 |
| 1999 | 1,175 | 1.84 | 2,738 | 4.30 | 5,270 | 8.27 | 24,425 | 38.33 | - | - | 30,112 | 47.26 | 63,720 |
| 2000 | 897 | 1.50 | 3,354 | 5.61 | 4,828 | 8.07 | 24,344 | 40.71 | - | - | 26,370 | 44.10 | 59,793 |
| 2001 | 1,125 | 1.88 | 3,205 | 5.36 | 4,631 | 7.74 | 25,262 | 42.24 | - | - | 25,584 | 42.78 | 59,807 |
| 2002 | 1,297 | 1.84 | 3,924 | 5.56 | 5,604 | 7.95 | 30,567 | 43.34 | - | - | 29,130 | 41.31 | 70,522 |
| 2003 | 1,410 | 1.89 | 5,281 | 7.09 | 5,342 | 7.17 | 31,638 | 42.46 | - | - | 30,837 | 41.39 | 74,508 |
| 2004 | 1,722 | 2.13 | 5,388 | 6.68 | 5,830 | 7.22 | 33,947 | 42.07 | - | - | 33,812 | 41.90 | 80,699 |
| 2005 | 1,324 | 1.41 | 7,150 | 7.61 | 6,988 | 7.44 | 39,882 | 42.47 | - | - | 38,552 | 41.06 | 93,896 |
| 2006 | 1,824 | 2.02 | 5,880 | 6.52 | 7,011 | 7.78 | 38,737 | 42.96 | - | - | 36,718 | 40.72 | 90,170 |
| 2007* | 1,543 | 1.50 | 3,319 | 3.23 | 3,854 | 3.76 | 43,613 | 42.50 | 3,194 | 3.11 | 47,106 | 45.90 | 102,629 |

*ஏற்பாடுகள் ஆதாரம்: தகவல் தொழில்நுட்பப் பிரிவு-SLBFE

மனித சக்தி மட்டங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பெண்களின் புறப்பாடு 1994 - 2007

| Year | தொழிலாண்மை மட்டம் | | இடைமட்டம் | | எழுதுவினைஞர் தொடர்புடையது | | திறனுடையோர் | | குறைத்திறன் | | திறனின்மை | | வீட்டுப் பணிப்பெண்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | No. | % | |
| 1994 | 18 | 0.04 | 46 | 0.11 | 151 | 0.34 | 5,453 | 12.45 | - | - | 2,019 | 4.61 | 36,104 | 82.45 | 43,791 |
| 1995 | 41 | 0.03 | 421 | 0.33 | 506 | 0.40 | 7,734 | 6.12 | - | - | 3,906 | 3.09 | 113,860 | 90.03 | 126,468 |
| 1996 | 43 | 0.04 | 309 | 0.26 | 477 | 0.40 | 4,867 | 4.07 | - | - | 3,289 | 2.75 | 110,479 | 92.48 | 119,464 |
| 1997 | 39 | 0.03 | 249 | 0.22 | 571 | 0.51 | 8,670 | 7.69 | - | - | 3,773 | 3.35 | 99,429 | 88.20 | 112,731 |
| 1998 | 40 | 0.04 | 311 | 0.29 | 842 | 0.79 | 9,656 | 9.11 | - | - | 9,751 | 9.20 | 85,349 | 80.56 | 105,949 |
| 1999 | 78 | 0.07 | 423 | 0.36 | 940 | 0.81 | 12,852 | 11.08 | - | - | 13,659 | 11.77 | 88,063 | 75.91 | 116,015 |
| 2000 | 38 | 0.03 | 427 | 0.35 | 997 | 0.81 | 12,131 | 9.91 | - | - | 9,389 | 7.67 | 99,413 | 81.22 | 122,395 |
| 2001 | 93 | 0.07 | 571 | 0.46 | 1,384 | 1.11 | 11,501 | 9.26 | - | - | 7,801 | 6.28 | 102,850 | 82.81 | 124,200 |
| 2002 | 184 | 0.14 | 631 | 0.47 | 1,635 | 1.23 | 14,911 | 11.19 | - | - | 7,355 | 5.52 | 108,535 | 81.45 | 133,251 |
| 2003 | 131 | 0.10 | 2,226 | 1.64 | 1,437 | 1.06 | 16,106 | 11.90 | - | - | 13,427 | 9.92 | 102,011 | 75.37 | 135,338 |
| 2004 | 105 | 0.08 | 1,173 | 0.88 | 849 | 0.63 | 11,979 | 8.94 | - | - | 9,392 | 7.01 | 110,512 | 82.47 | 134,010 |
| 2005 | 97 | 0.07 | 892 | 0.65 | 754 | 0.55 | 6,806 | 4.95 | - | - | 3,352 | 2.44 | 125,493 | 91.34 | 137,394 |
| 2006 | 148 | 0.13 | 758 | 0.68 | 900 | 0.81 | 6,326 | 5.66 | - | - | 3,987 | 3.57 | 99,659 | 89.16 | 111,778 |
| 2007* | 66 | 0.06 | 516 | 0.45 | 597 | 0.52 | 5,996 | 5.232 | 41.00 | 0.21 | 5,085 | 4.43 | 102,176 | 89.10 | 114,677 |

*ஏற்பாடுகள் ஆதாரம்: தகவல் தொழில்நுட்பப் பிரிவு-SLBFE




ஆண் புலம்பெயர் தொழிலாளர்கள், வீட்டுப் பணிப்பெண்கள் ஏனைய பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் ஒப்பீடு - 2007

ஆதாரம்: தகவல் தொழில்நுட்பப் பிரிவு-SLBFE

நாட்டிற்கு அதிகளவான வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரும் புலம்பெயர் தொழிலாளர் அனுப்புகைகள் (தனியார் அனுப்புகைகள் என ஆவணப்படுத்தப்படுபவை) இலங்கை பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. 2007 இல் US டொலர் 2.5 பில்லியன், அனுப்புகைகளாக நாட்டிற்கு கிடைத்தன. இது முந்திய வருட அனுப்புகைகளை விட 15 வீதம் அதிகமானது. அனுப்புகைகளாக எமக்கு கிடைக்கும் தரவுகளானவை வங்கியூடாக அனுப்பப்பட்டவை மாத்திரமே. ஏனைய முறைசாரா வழிகள் மூலம் கொண்டுவரப்பட்டவைகள், ஆட்கள் கையில் கொண்டு வந்தவைகள் நண்பர்கள், உறவினர்கள் மூலம் அனுப்பி வைத்தவைகள், ஏனைய இவ்வாறான அனுப்புகைகள் இதில் உள்ளடங்கா.

1990-2007 காலப்பகுதியில் தனியார் அனுப்புகைகளும் வெளிநாட்டுச் சம்பாத்தியமும் (ரூபா மில்லியனில்)

| வருடம் | தனியார் அனுப்புகைகள் | தேயிலை | றபர் | தென்னை | ஆடை | மொத்த ஏற்றுமதி | மொத்த ஏற்றுமதியில் தனியார் அனுப்புகைகளின் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1990 | 16,054 | 19,823 | 3,080 | 2,783 | 25,163 | 79,481 | 20.20 |
| 1991 | 18,311 | 17,867 | 2,641 | 2,619 | 31,652 | 82,225 | 22.27 |
| 1992 | 24,037 | 14,893 | 2,960 | 3,691 | 49,176 | 107,855 | 22.29 |
| 1993 | 30,592 | 19,911 | 3,086 | 2,796 | 62,349 | 138,175 | 22.14 |
| 1994 | 34,992 | 20,964 | 3,582 | 3,761 | 68,945 | 158,554 | 22.07 |
| 1995 | 40,482 | 24,638 | 5,713 | 5,271 | 84,806 | 195,092 | 20.75 |
| 1996 | 46,003 | 24,068 | 5,753 | 6,091 | 93,814 | 226,801 | 20.28 |
| 1997 | 54,445 | 42,533 | 4,640 | 6,940 | 121,083 | 274,193 | 19.86 |
| 1998 | 64,517 | 50,280 | 2,808 | 6,110 | 142,303 | 310,938 | 20.75 |
| 1999 | 74,356 | 43,728 | 2,305 | 9,119 | 155,214 | 325,171 | 22.87 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2000 | 87,697 | 53,133 | 2,179 | 9,174 | 206,360 | 420,114 | 20.87 |
| 2001 | 103,180 | 61,602 | 2,129 | 7,348 | 208,624 | 430,372 | 23.97 |
| 2002 | 123,183 | 63,105 | 2,552 | 8,009 | 214,895 | 449,850 | 27.38 |
| 2003 | 136,475 | 65,936 | 3,717 | 8,926 | 231,652 | 495,426 | 27.55 |
| 2004 | 158,291 | 74,897 | 5,155 | 11,453 | 268,574 | 583,967 | 27.11 |
| 2005 | 197,968 | 81,481 | 4,724 | 11,403 | 276,144 | 638,276 | 31.02 |
| 2006 | 224,678 | 88,100 | 9,310 | 7,100 | 308,040 | 688,270 | 32.64 |
| 2007* | 276,814 | 102,500 | 10,940 | 8,090 | 334,200 | 774,050 | 35.76 |

*ஏற்பாடுகள்　　　　ஆதாரம்: தகவல் தொழில்நுட்பப் பிரிவு-SLBFE

தொழிலாளர் புலம்பெயர் செய்முறையை முகாமைத்துவம் செய்வதில் இலங்கைப் பிரசைகளின் கௌரவமான புலம்பெயர்வையும் பாதுகாப்பையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தும் பொருட்டு இச் செயன்முறையில் இன்னும் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட வேண்டும். சர்வதேச தொழிலாளர் சந்தையின் கேள்வி அலைக்கு இலங்கை பதிற்செயற்பாடாற்றிக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களை அனுப்பும் நாடென்ற வகையில் தொழிலாளர் புலம்பெயர்வானது நாட்டின் புலம்பெயர் தொழிலாளர் படையின் தோற்றப்பாட்டை வரையும் சர்வதேச தொழிலாளர் சந்தையின் கேள்விகளாலே தீர்மானிக்கப்படுகிறது என்பதில் இலங்கை கவனம் செலுத்துகிறது. தொழிலாளர் புலம்பெயர்வு செயன்முறை கவனம் தேவைப்படும் பல அழுத்தத்துக்குரிய விடயங்களைக் கொண்டுள்ளது. அரச அரசற்ற துறைகளால் வேறுபட்ட முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டாலும் புலம்பெயர் தொழிலாளர்கள் புலம்பெயர் செயன்முறையின் எல்லாக் கட்டங்களிலும் பெருந்தொகையான தடைகளை எதிர்கொள்கிறார்கள். புறப்பட முன்னர், சேவையின்போது, திரும்பும்போது, குடும்பத்தில் மீள இணையும்போது என பிரச்சினைகள் உள்ளன. பெரும்பாலான இந்த விடயங்கள் திறன் குறைந்த மற்றும் வீட்டுப்பணிப்பெண் வகையினராகிய இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர் படையினரிடையே தான் மேற்கிளம்புகிறது.

2004-2007 இல் தன்மை பால்நிலையில் பெறப்பட்ட முறைப்பாடுகள்

| முறைப்பாடுகளின் தன்மை | 2004 | | | 2005 | | | 2006 | | | 2007* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத் | ஆண் | பெண் | மொத் | ஆண் | பெண் | மொத் | ஆண் | பெண் | மொத் |
| இணங்கப்பட்டஊதியத்தை வழங்காமை | 150 | 1,476 | 1,626 | 132 | 1,577 | 1,709 | 454 | 1,535 | 1,989 | 169 | 1,326 | 1,495 |
| தொடர்பாடல் இல்லை | 87 | 2,078 | 2,165 | 78 | 1,677 | 1,755 | 109 | 2,402 | 2,511 | 108 | 1,578 | 1,686 |
| நோய் | 51 | 559 | 610 | 78 | 575 | 653 | 78 | 584 | 662 | 47 | 625 | 672 |
| தொந்தரவு (உடலியல், பாலியல்) | 78 | 1,675 | 1,753 | 142 | 1,807 | 1,949 | 104 | 1,662 | 1,766 | 33 | 1,240 | 1,273 |
| இயற்கை மரணம் | 73 | 80 | 153 | 55 | 60 | 115 | 100 | 72 | 172 | 112 | 87 | 199 |
| விபத்து மரணம் | 43 | 32 | 75 | 38 | 24 | 62 | 59 | 18 | 77 | 48 | 18 | 66 |
| மரணம் - மனிதக் கொலை | 3 | 5 | 8 | 1 | 3 | 4 | - | 1 | 1 | 1 | 2 | 3 |
| மரணம் - தற்கொலை | 3 | 6 | 9 | 5 | 17 | 22 | 3 | 4 | 7 | 3 | 6 | 9 |
| லெபனான் யுத்தத்தால் மரணம் | - | - | - | - | - | - | - | 6 | 6 | - | - | - |
| ஒப்பந்தம் முடிந்தும் திருப்பி அனுப்பாமை | 15 | 191 | 206 | 44 | 667 | 711 | 36 | 689 | 725 | 36 | 886 | 922 |
| வரவற்க எவருமில்லை | - | 13 | 13 | 2 | 33 | 35 | - | - | - | - | - | - |
| வீட்டில் பிரச்சினை (இலங்கை) | 13 | 330 | 343 | 33 | 483 | 516 | 25 | 497 | 522 | - | 36 | 36 |
| வேலை ஒப்பந்தத்தை மீறல் | 695 | 449 | 1,144 | 1,137 | 655 | 1,792 | 838 | 314 | 1,152 | 322 | 417 | 739 |
| வேலையற்று இருத்தல் | - | 13 | 13 | 112 | 429 | 541 | 562 | 498 | 1,060 | 172 | 312 | 484 |
| காலம் வரமுன் முடிவுறுத்தல் | - | - | - | 1 | - | 1 | - | - | - | 11 | 2 | 13 |
| சட்டவிரோத காசுப் பரிமாற்றம் | 5 | 76 | 81 | - | 1 | 1 | - | 1 | 1 | - | 5 | 5 |
| ஏனையவை (வீட்டுத் துறை) | 11 | 120 | 131 | 1 | 22 | 23 | 17 | 75 | 92 | - | 55 | 55 |
| ஏனையவை (வீடற்ற துறை) | 20 | 3 | 23 | 14 | 26 | 40 | 10 | - | 10 | 4 | 4 | 8 |
| அடையாளம் காணப்படாதவை | - | - | - | 1 | - | 1 | 7 | 69 | 76 | 182 | 598 | 780 |
| மொத்தம் | 1,247 | 7,106 | 8,353 | 1,874 | 8,056 | 9,930 | 2,402 | 8,427 | 10,829 | 1,248 | 7,197 | 8,445 |

*ஏற்பாடுகள்　　　　ஆதாரம்: இணக்கப்பாட்டுப் பிரிவு - *SLBFE* தகவல் தொழில்நுட்பப் பிரிவு *SLBFE*

புலம்பெயர் தொழிலாளர் எதிர்கொள்கின்ற சுரண்டலுக்கும் துஷ்பிரயோகத்திற்கும் பல்வேறு காரணிகள் உள்ளன. அவை தனிப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட, கட்டமைப்புரீதியான காரணிகளாகும். திறன்குன்றிய தன் காரணமாக, குறைவான திறன்களை உடையவர்கள் உயரிய திறன் அவசியப்படுகின்ற தொழில்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. குறைவான கல்வி மட்டம், சமூக அழுத்தங்கள், மனோநிலை ஆகியவற்றின் காரணமாக பயிற்சிகள் வழங்கப்படும் பொழுது அவற்றிலிருந்து முழுமையாக கிரகிக்க முடியாதுள்ளவர்களாக சிலர் இருக்கின்றனர். அல்லது பயிற்சிகளில் போதாமைகள் காணப்படுகின்றன. மேலும் ஒப்பந்தங்கள் இன்மையும், புலம்பெயர் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு நாடுகளுக்கிடையில் பொருத்தமான உடன்படிக்கைகள் இன்மையும் இதற்கான காரணியாகும். அத்துடன் தூதுவராலயங்கள் மூலம் சார்பான செயற்பாடுகளையுடைய மேற்பார்வைகள், பாதுகாப்புப் பொறிமுறைகள் கொண்ட தேசிய கண்காணிப்பு பொறிமுறைகள் தொழிலாற்றகின்ற நாடுகளில் இன்மை, பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்டரீதியான பொறிமுறைகள் இன்மை போன்றனவும் இவ்வகையான துஷ்பிரயோகம், சுரண்டலுக்கு காரணியாகின்றன. அரசாங்கத்தினால் பல்வேறு வகையான பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும், குறைவான திறன்களையுடையவர்கள் பல்வேறு வகையான சுரண்டல்களையும், துஷ்பிரயோக நிலைமைகளையும் எதிர்கொள்கின்றனர். இவற்றுள் சம்பளம் வழங்கப்படாமை, எவ்வித நட்டஈடுகளும் இன்றி குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் வேலையை கட்டாயமாக முடிவுறுத்தல், நீண்ட நேரம் வேலை செய்ய நிர்ப்பந்தித்தல், வேலைத் தொல்லை, ஓய்வு இன்மை, வாய்மூல மற்றும் உடல் உளரீதியான பாலியல் துஷ்பிரயோகம், போக்குவரத்து ஆவணங்களை பறிமுதல் செய்தல் போன்றனவும் உள்ளடங்கும்.

இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் எதிர்கொள்கின்ற சுரண்டல்களையும், துஷ்பிரயோகங்களையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆவணப்படுத்தியுள்ளது. இருப்பினும் இவர்கள் எதிர்கொள்கின்ற சுரண்டல்கள், துஷ்பிரயோகங்கள், உரிமை மீறல்கள், சுதந்திரம் ஆகியன தொடர்பிலான முழு விபரங்களையும் இப்புள்ளி விபரங்கள் கொண்டிருக்கவில்லை. மேலும் புலம்பெயர் தொழிலாளர்கள் புலம்பெயர் செயற்பாட்டின் பொழுது ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் ஆய்வு மூலமோ, அல்லது கற்கை மூலமோ முழுமையாக ஆவணப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக இவர்களது குடும்ப உறுப்பினர்களும் தவிர்க்க விடப்பட்டுள்ளனர். எனவே புலம்பெயர்வினால் ஏற்படுகின்ற சமூகத் தாக்கங்கள் முழுமையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அதற்கான பரிகார முறைகள் அரசின் உதவியுடன் கூடிய உத்தி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பின்னிணைப்பு 2

# மேன்மை, பாதுகாப்பு, ஒப்புரவு ஆகிய நிலைமைகளின் கீழ் புலப்புபெயர்வை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேச கடப்பாடுகள்

ஐக்கிய நாடுகள் முறையினால் வலுவூட்டப்பட்டு விருத்தி செய்யப்பட்டு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினால் பேணப்படுகின்றன உரிமைகள் சுதந்திரங்கள் மற்றும் சர்வதேச தொழில் அமைப்பு சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சர்வதேச தொழில் சட்ட ஏற்பாடுகள் ஆகியன சகல புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் ஏற்புடையதாகும். புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பாரபட்சங்கள், சுரண்டல்கள், துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை அங்கீகரிக்கின்ற தன்மையிலும், மற்றும் புலம்பெயர் தொழிலாளர் முறையாக அல்லது முறையற்ற முறையில் பிரவேசித்திருந்தாலும், அவற்றை அடிப்படை மனித உரிமைகள் உள்ளடங்கலாக பாதுகாப்பதற்கான குறைந்த பட்ச நியமங்களைப் பேணுவதிலேயே இந்த சர்வதேச கருவிகளின் வெற்றி தங்கியுள்ளது.

சகல புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாப்பது தொடர்பான சமவாயத்தை, சில உறுப்புரைகள் தொடர்பான சில பிரகடனங்களுடன், 1996, மார்ச் 11 ஆம் திகதி இலங்கை ஏற்றுக்கொண்டது. இலங்கை இதனை ஏற்றுக்கொண்டமையானது சகல புலம்பெயர் தொழிலாளர்களது உரிமைகளையும், கொள்கைகளையும் பேணிப் பாதுகாப்பதில் இலங்கைக்குள்ள அர்ப்பணிப்பை இது எடுத்துரைக்கிறது. புலம்பெயர் தொழிலாளர்களது உரிமைகள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதில் மிகவும் காத்திரமான சர்வதேச சாசனமாக, சர்வதேச சமவாயம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்சமவாயமானது, பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை, சாதி ரீதியான சகல விதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பது தொடர்பான உடன்படிக்கை பெண்களுக்கெதிரான சகல விதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பது தொடர்பான சமவாயம், சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் உள்ளடங்கலாக சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், ஐ.நா.வின் சர்வதேச மனித உரிமையின் சாசனம் ஆகியன தொடர்பிலும் இச்சமவாயம் கவனத்தை ஈர்க்கிறது. மேலும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் புலம்பெயர் தொழிலாளர் சமவாயங்களின் இரண்டு ஏற்பாடுகள் தொடர்பாகவும் கவனத்தை ஈர்க்கிறது.

2003, ஜுலை 1 ஆம் திகதி முதல் சர்வதேச சமவாயம் நடைமுறைக்கு வந்தது. இச்சமவாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய சட்டவாக்க, நீதி, நிர்வாக நடைமுறைகள் தொடர்பான ஆரம்ப அறிக்கையை 2008 ஜுனில் இலங்கை சமர்ப்பித்தது. இச்சமயவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் ஏற்கனவே இலங்கை அரசியல் அமைப்பில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் இவ் அறிக்கையில் பின்வரும் விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கையிலிருந்து பல தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்கின்றவர்கள் என்ற முறையில், இலங்கை தொழிலாளர்களது நலனைப் பேணுவதற்கு ஏதுவாக, அவர்களது சேவைகளைப் பெற்றுக் கொள்கின்ற மேற்படி, சமவாயத்திற்கு உடன்படுகின்ற நாடுகள் ஆகக் குறைந்த சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களது உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் உறுதியான சட்ட வரைவுச் சட்டகங்கங்களை உருவாக்க வேண்டும். இருப்பினும் பாரிய அளவில் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துகின்ற பல நாடுகள் இச்சமவாயத்தின் தரப்பினர்களாக இது வரை வரவில்லை."

வெளிநாட்டிற்கு வேலை செய்பவர்களை அனுப்பி வைக்கின்ற நாடு என்ற முறையில், சர்வதேச ரீதியான புலம்பெயர்கின்ற தொழிலாளர்களதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களதும் நலனையும்,

[14] ச.தொ.ச சாசனத்தின் தனித்திருக்கும் தன்மை வாய்ந்த ஏற்பாடுகளில் 97, 143ம் இலக்க விடயங்களின் பல அம்சங்களை சர்வதேச (ஐ.நா) சமவாயங்கள் கொண்டிருந்த பொழுதிலும் கூட, சர்வதேச சமவாயங்களில் குறிப்பிடப்படவை உரிமைகளை விட அதிகமான விடயங்களை ச. தொ. அ சாசனத்தின் தெரிவு செய்யப்பட்ட சில ஏற்பாடுகள் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.நா. சமவாயத்திற்கு வாழ்த்துரையாக அவை அமைந்தன

[15] புலம்பெயர்ந்த தொழிலாளர்களாலும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் உரிமைகளை பாதுகாப்பதற்கான குழு, சமவாயத்தின் 73ஆம் உறுப்புரிமயின் க் கீழ் அரச தரப்பினரால் சமப்பிக்கப்பட்ட அறிக்கை பரிசீலனைகள். அரச தரப்பினரின் ஆரம்ப அறிக்கை 2004, இலங்கை, *cmm/c/lka/1, 2008* ஜுன் 19. *http:www2.ohchr.org/ english/ bodies/ cmw/. c.lkai.doc*

ஒப்புரவையும், மனித, சட்ட நிலைமைகளை காத்திரமாக மேம்படுத்தக்கூடிய விடயங்களுடன் தொடர்புடைய இச்சமயவாயத்தின் 4 ஆம் பகுதி யிலுள்ள உறுப்புரைகளுடனேயே இலங்கையின் அக்கறை பிரதானமாக காணப்படுகின்றது. சர்வதேச சமவாயம் உறுதிப்படுத்தப்படுவதற்கு பல வருடங்க ளுக்கு முன்னரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டம் 1985 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது. அச்சமவாயத்தின் நான்காம் பகுதியில் பட்டியலிடப்பட்டுள்ள பல விடயங்கள் இலங்கை சட்டத்திலும் காணப்படுகின்றன[16]. அவையாவன தகவல் தொடர்பான ஏற்பாடுகள், வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன் வழங்கப்படும் பயிற்சிகள், வேலைக்கமர்த்தும் முகவர்களை ஒழுங்குபடுத்தல், சர்வதேச ஒத்துழைப்புகள், வேலை தொடர்பான ஆலோசனைச் சேவைகள், நாடு திரும்புகிறவர் களை மீள் ஒங்கிணைத்தல் ஆகியவை. இருப்பினும் இச்சமவாயத்தை முழுமையாக நடைமுறைப்படுத் துவதற்கு இன்னும் பல விடயங்களை இலங்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது என அண்மைய மீளாய்வுகள் தெரிவிக்கின்றன.[16]

அவற்றுள் சில : புலம்பெயர இருப்போருக்கு இச் சமவாயத்தை மொழிபெயர்ப்புச் செய்து வழங்குதல், வெளிநாடுகளில் காணப்படுகின்ற இலங்கைத் தூதரகங்களில் ஆலோசனைச் சேவைகளைப் பெற் றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், அவர்கள் புலம்பெயரவிருக்கின்ற நாடுகளில் காணப் படுகின்ற சமூக, பொருளாதார, கலாசார நிலை மைகள் பற்றியும் அங்கு காணப்படுகின்ற தொழிலா ளர் மற்றும் ஏனைய சட்டங்கள் பற்றியும் தெளிவுப டுத்தி அறிவூட்டல்; வேலைக்கு செல்பவருக்கு தெரிந்த மொழியில் தொழில் ஒப்பந்தங்களை விநியோகித்தல், புலம்பெயர்ந்த நாட்டில் ஏதாவது பொருள்கோடல்கள் தேவைப்பட்டால் அதனை அவர்களுக்கு புரிகின்ற மொழியில் வழங்கல், புலம்பெயர் தொழிலாளர்களது வாக்குரிமையை உறுதிப்படுத்தல், புலம்பெயரவுள்ள தொழிலாளர்க ளுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கல், தனியார் முகவர்களை துரிதமாக ஒழுங்குபடுத்தல், மற்றும் வஞ்சக் கடத்தல், முறையற்ற புலம்பெயர் வுகள் போன்றவற்றைத் தடுத்தல்.

[16]பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பான குழுவின் அறிக்கை, மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை, 2005, ஒகஸ்ட: ரொபியன் ஜர்டெல், நிகோலா பைபர் அலேலியா என்கொர், சகல புலம்பெயர் தொழிலாளர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்களது உரிமைகள் தொடர்பாக ஐ.நா. சமவாயத்தை 1990) அங்கீகிப்பதனால் ஏற்படும் தாக்கங்கள். இலங்கை, பிலிப்பைன்சில் மேற்கொள்ளப்பட்ட சம்பவக்கற்கை, 15ஆம் இலக்க செயற்பாடு ஆவணம், ஆசியா, பசுபிக் புலம்பெயர் 15ஆம் இலக்க செயற்படு ஆவணம், ஆசியா, பசுபிக் புலம்பெயர் ஆய்வு வலையமைப்பு, 2005 ஒகஸ்ட்.

பின்னிணைப்பு 3

# தொழில் புலம்பெயர்வுகள் தொடர்பான தேசிய சட்டங்கள்

1985, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டமே (இ.வெ.வே.ப.ச.) (SLBFE) தொழில் புலம்பெயர்வுகளை அங்கீகரிக்கின்ற முத லாவது பிரதான சட்டவாக்கமாகும்.[17] இலங்கையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களைப் பாதுகாக் கின்ற தேசிய தொழில் சட்ட ஆளுகையின் கீழ் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வெளிநாட்டில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்) உள்ளடக்கப்ப டுவதில்லை. எனவே இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்கு புலம்பெயர்ந்து பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு ஏற்புடைய பிரதான சட்டவாக்கம் இ.வெ. வே. ப. ச. ஆகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலனோம் புகை அமைச்சின் பரப்பெல்லையின் கீழ் இ.வெ.வே.ப.ச. காணப்படுகின்து.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சட்டத்தை நீக்கிவிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகச் சட்டமானது சகலவிதமான புலம்பெயர் உழைப்பாளர்களுக்கும் ஏற்புடையதாகக் காணப்படுகிறது. இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்ப பணியகத்தை நிறுவுவதும், பொதுவான அதிகாரங்கள் நோக்கங்கள் தொடர் பான கவனத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைகளை வழங்குவதும் இச்சட்டவாக்கத் தின் அடிப்படை நோக்கமாகும். இலங்கையிலி ருந்து வெளிநாட்டிற்கு புலம்பெயர்ந்து தொழிலாற் றுபவர்களுக்கான ஆளுகை அதிகார அமைப்பாக திகழ்வதற்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிர்வா கத்திற்கான பிரதான முகவராக செயற்படுத்துவதற் குமான சட்ட ஆணையை இ.வெ. வே. ப. இற்கு இச்சட்டம் வழங்குகிறது. இ.வெ.வெ. ப. 1986 இல் நிறுவப்பட்டது. இது அரச ஆதிக்கமுடைய ஓர் அமைப்பாகும். இதற்கான அதிகாரங்கள், கட மைகள், கடப்பாடுகள் போன்றவற்றை இ.வெ. வே. ப. சட்டத்திலிருந்து பெற்றுக்கொள்கிறது.

11 உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர்கள் சபையினால் இ.வெ.வே.ப. முகாமைத்துவம் செய் யப்படுகிறது. இவர்கள் அனைவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலனோம்புகை அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட நிறுவன ரீதியான செயற்பாடுகளின் மூலம் தொழிலாளர்களின் குடிப்பெயர்வுகளை முகாமைத்து வம் செய்வதற்கான அதிகாரத்தை இ.வெ.வே.ப. இற்கு இச்சட்டம் வழங்குகிறது. (அவற்றுல் சில) வேலைவாய்ப்பு முகவர்களுக்கு அனுமதிப்பத்திரங் களை வழங்கல், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டுதல், தராதரங்களை நிர்ணயித்தலும் தொழில் ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடல், வெளிநாட்டில், வேலை செய்கின்ற இலங்கைத் தொழிலாளர்களது பாதுகாப்பையும், நலனையும் பேணுவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளல் போன்றன அவற் றுள் சிலவாகும். இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவில் இதனது நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை பின்வருமாறு தொகுத்து கூறலாம்.

- தாராதங்களை நிர்ணயித்து தொழில் ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல்.

- ஆட்சேர்ப்பு உடன்படிக்கைகளை முறைப்படுத் துவதற்காக சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அதிகார அமைப்புகள், தொழில் வழங்கு நர்கள், தொழில் முகவர்கள் போன்றவர்க ளுடன் உடன்படிக்கைகளை மேற்கொள் ளல்.

- நியாயமான ஊதியம், தொழில் தரா தரங்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய மாதிரி தொழில் ஒப்பந்தங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

[17] 1994ஆம் ஆண்டு 4ஆம் இலக்கச் சட்டத்தாலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக ஒழுங்குவிதிகளாலும் திருத்தப்பட்ட 1985ஆம் ஆண்டு 21ஆம் இலக்கச் சட்டம் (இலங்கை வர்த்தமானி, 1985-08-28, இல 369/9)

[18] இல *32 of 1980*

- தொழிலுக்காக வெளிநாட்டிற்கும் செல்கின்ற இலங்கை பணியாளர்களுக்கு இலங்கைக்கு வெளியே விநியோகிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மைத் தன்மையை பரிசோதித்தல்.

- இலங்கைக்கு வெளியே வேலைக்கமர்த்தப்பட்டுள்ள இலங்கையர்களது பாதுகாப்பையும் நலனையும் பொறுப்பேற்றல்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களை பாதுகாக்கக் கூடிய மற்றும் தொழில் ரீதியான புலம்பெயர்வுகளுக்கு உதவக்கூடிய, தொழில் புலம்பெயர்வு செயன்முறை ஆட்சிகளை இலகுபடுத்தக்கூடிய விதத்தில் இந்நோக்கங்கள் பல்வேறு வகையான ஒழுங்கு விதிகளையும், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. விசேடமாக புலம்பெயர்வு செயன்முறையின் முதல் இரண்டு படிமுறைகள், வெளியேறுவதற்கு முன்பும் சேவைக் காலத்தின் பொழுதும் அமைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அனுமதிப்பத்திரங்களை வழங்கல், ஆட்சேர்ப்பு நிறுவனங்களை மேற்பார்வை செய்தலும் முகாமைத்துவம் செய்தலும், பூரணத்துவம்மிக்க பதிவு முறையின் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களை பதிவு செய்தல், இப்பதிவுச் செயன்முறையிலிருந்து தகவல்களை வழங்கல் ஆவணப்படுத்தல், பொது மக்களுக்காக வேலை வங்கி வசதிகளை ஏற்படுத்தி நிறுவுதல், வெளிநாட்டிற்கு தொழிலுக்காக அனுப்புகின்றப்பொழுது அது தொடர்பான ஒப்பந்தங்கள், உடன்படிக்கைளை மேற்கொள்ளல் போன்றன இச்சட்டரீதியான ஏற்பாடுகளின் காரணமாக இ.வெ.வே.ப. இற்கு கிடைத்த வகிபாகங்களாகும்.

நலனோம்புகை மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய நடைமுறைகளை நோக்குகையில், வெளிநாட்டு வேலைக்கென தொழிலாளர்களை தயார் படுத்துவதற்கும், அவர்களை மேம்படுத்துவதற்குமான பல்வேறு நலனோம்புகை நடைமுறைகளை மேற்கொள்வதற்கான வல்லமையை இ.வெ.வே.ப. இற்கு சட்டம் வழங்குகின்றது. இச்செயற்பாடுகளில் வெளிநாடு செல்வதற்கு முன்னதான பயிற்சிகள், திறன் விருத்தி, திறன் சார்ந்த தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கேற்ற விதத்தில் வலுப்படுத்தல், மாதிரி ஒப்பந்தங்களை விருத்தி செய்து அவை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை உறுதி செய்தல், தொழிலாளர்களை வேலைக்கமர்த்துகின்ற நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களது நலனுக்காக செயற்படக்கூடிய தொழில் அதிகாரிகள் மற்றும் நலனோம்புகை அதிகாரிகளை நியமித்தல், தொழிலாளர் நல நிதியமொன்றை உருவாக்கல், அவர்களது பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள், மற்றும் கடன் திட்டங்களை ஏற்படுத்துதல் போன்றனவும் உள்ளடங்கும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களது குறிப்பிட்ட சில தேவைகளுக்கு சார்பாக பதிலளிப்பதற்கான காத்திரமான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக இலங்கை குறிப்பிடப்படுகிறது. அரசு பரந்த அர்ப்பணிப்புகளுடன் செயற்பட்ட பொழுதிலும், சவால்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொள்வதற்கு தொடர்ச்சியாக பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், இப்பயணத்தில் ஆரம்பப் படிமுறையாக கருதப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளை மீளாய்வுச் செய்ய வேண்டியும் உள்ளது. சகல புலம்பெயர் தொழிலாளர்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச சமவாயத்தை ஏற்றுக் கொண்டதன் பின்னர் சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதனை இதுவரை மேற்கொள்ளாதது ஓர் குறைபாடாகும்.

பின்னிணைப்பு 4

# உசாத்துணைகள்


வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஒப்பந்த தொழில் தொடர்பாக அமைச்சின் ஆலோசனைகள் பிரிவால் வெளியிடப்பட்ட அபுதாலி பிரகடனம். இது ஆசியாவிலிருந்து புறப்பட்டு அவர்கள் சென்றடைகின்ற நாட்டுடன் தொடர்புடையது.

அசாகொசோ தோமஸ் D. (2000) இ.வெ.வே. ப. இன் நிறுவன ரீதியான கணக்காய்வு, பிரசுரிக்கப்படாத அறிக்கை

பெண் தொழிளாளர்களை சுரண்டல், துஷ்பிரயோகம் செய்தல், பக்கச்சார்புடன் நடத்துதல் ஆகியவற்றை தடுப்பது தொடர்பான தகவல் வழிகாட்டி. ச.தொ.அ (புத்தகம் 1, 2, 3, 4, 5, 6) (சிங்களம்/ தமிழ்) 2006. க.தொ.அ. இலங்கை.

புலம்பெயர்ந்தவர்களது உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவது தொடர்பான ASEAN பிரகடனம்.

புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்களது பண அனுப்பீடுகளை இடையீடு இன்றி மேற்கொள்வதும், பயன்படுத்தலும் (2001) ஏப்பிறல் 5 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடல் அறிக்கை. இலங்கை CENWOR இன் ஆவணம் 69.70.

டெல் ரொசாரியோ T. (2008) புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான சமூகக் காப்புறுதியின் சிறப்பான நடைமுறைகள் : இலங்கைத் தொடர்பான விடயங்கள் : தொழிலாளர் புலப்பெயர்வு செயலாட்சித் தொடர்பான ஆசிய பிராந்திய நிகழ்ச்சித்திட்டம், செயலறிக்கை இல. 12, ச.தொ.அ. இலங்கை.

டயஸ் பண்டாரநாயக்க A. 2008. புலம்பெயர் தொழிலாளர்கள்: நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் பார்த்தல். டெய்லி மிரர், பைனான்சியல் டய்ம்ஸ் (குயைெஉயைட வுஅைநள)

டயஸ் M. & ஜயசுந்தர (2000). சர்வதேச புலம்பெயர்வுத் தொடர்பான இலங்கை ஆய்வு (பெண்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது).

டயஸ் M. & ஜயசுந்தர R (2004). இலங்கையில் வெளிப்புலம் பெயர்வு தொடர்பான ஆய்வு ச.தொ.அ., கொழும்பு இலங்கையின் இரண்டு பிரதேசங்களிலிருந்து நாடு திரும்பிய பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் 2002. ஆய்வுத் தொடர் இல. 26. பெண்கள் ஆய்வு மையம் (CENWOR) இலங்கை.

டயஸ் M. & ஜயசுந்தர L (2002). புலம்பெயர் ஆடைத்தொழிற்சாலை தொழிலாளர்கள், இலங்கை: மவ்லிடீஸ் ஓமான், பெண்கள் ஆய்வு மையம் (CENWOR) இலங்கை.

இலங்கைக்காக தொழிலாளர் புலப்பெயர்வு கொள்கை வரைவுச் சட்டக அம்சங்கள், இலங்கைக்கான ச.தொ.ச. ஆலோசனை தூதுக் குழுவினரின் விஜயம் தொடர்பான நகல் அறிக்கை, 2007 ஏப்பிறல் 18-26, சர்வதேச புலப்பெயாவு நிகழ்ச்சித்திட்டம் ச.தொ.அ., ஜெனிவா / ச.தொ.அ. அலுவலகம் கொழும்பு.

கஜவீர, G.A.K. (2007), உற்பத்தித் துறையில் பிராந்திய மாதிரி தேர்ச்சித் தராதரங்களும் இலங்கையின் தராதரங்களும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு, ச.தொ.அ., இலங்கை.

சர்வதேச (பூகோல) பொருளாதார வாய்ப்புகள் - பண அனுப்பீடுகள் மற்றும் புலப்பெயர்வுகள் தொடர்பான பொருளாதாரத் தாக்கங்கள் (2006) உலக வங்கி.

மற்றும் அபிவிருத்தி தொடர்பான பூகோள ஒன்றியம் மனிலா, 2008 ஒக்டோபர் 29-30. பின்புல ஆய்வு அறிக்கை அறிக்கை (மூலப் பிரதி) : ஆங்கிலம்) வட்ட மேசை : புலப்பெயர்வு, மனித உரிமைகள் மற்றும் உரிமைகளை பாதுகாத்தல் - ஓர் பகிரப்பட்ட பொறுப்பு. அமர்வின் இணைப்பாளர்கள் - பிலிப்பைன், ஐக்கிய அரபு இராச்சிய அரசாங்கங்கள்.

தாய்நாட்டிலும், புலம்பெயருகின்ற நாடுகளிலும் வினைதிறன்மிக்க தொழில் புலம்பெயர்வுக் கொள்கைகளை உருவாக்குவது தொடர்பான கையேடு. ஐரோப்பாவில் பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதற்கான அமைப்பு, IOM & ILO - 2006. OSCE, IOOM, ILO.

புலம்பெயர் பெண்தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற எச். ஐ. வி. தொடர்பான பிரச்சினைகள் : ஆசியா முதல் அரேபியா வரை அமைதியாக துன்புறுத்தலிலிருந்து தன்மானத்துடனும், ஒப்புரவுடனும், நீதியான முறையிலும் பாதுகாப்பைப் பெறல் (2008). யு. என். டி. பி. பிராந்திய நிலையம் கொழும்பு.

ஹெட்டிகே எஸ். டி. (1997) “புலம்பெயர்வும் சமூகப் பிரச்சிகைளும்” புலம்பெயர்வு பெண் உழைப்பாளர்கள் தொடர்பான சர்வதேச மாநாட்டு ஆவணம். சர்வதேச தொழிலாளர் ஒத்துழைப்பு தொடர்பான அமெரிக்க நிலையம் - கொழும்பு.

தொழிலாளர் புலப்பெயர்வு தொடர்பான பல்தேசிய வரவைச் சட்டகம் ச.தொ.அ. (2006). சர்வதேச புலப்பெயர்வு நிகழ்ச்சித்திட்டம் ஜெனிவா ச. தொ.அ. அலுவலகம்.

புலம்பெயர் தொழிலாளர்களது உரிமைகள் தொடர்பான சர்வதேச தொழில் தராதரங்கள் ச.தொ.அ. ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய கொள்கை வகுப்பாளர்களுக்கும் நடைமுறைப்படுத்துனர்களுக்குமான வழிகாட்டி (2007).

“புலம்பெயர் தொழிலாளர்களது உரிமைகமளைப் பாதுகாப்பது தொடர்பில் தொழிற்சங்கங்களினதும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் வகிப்பாகங்கள்” - புலம்பெயர் பெயர் பெண் தொழிலாளர் தொடர்பான சர்வதேச மாநாடு. 1997, ஒக்டோபர் 7-9, இன்டகண்டினன்டல் ஓட்டல், கொழும்பு.

ஜயவீர 5, டயஸ M & வனசுந்தர L (2002), இலங்கையின் இரண்டு பகுதிகளிலிருந்து நாடு திரும்பிய புலம்பெயர் பெண் தொழிலாளாகள் பெண்கள் ஆய்வு மையம் (CENWOR) இலங்கை.

கொடகொட 5(2006). நாட்டிற்கு பணத்தை கொண்டுவரும் : இலங்கையில் பால்நிலைக் கொள்கைகளின் காரணமாக ஏற்படும் வறுமையும், புலப்பெயர்வுகளும், பால்நிலை, புலப்பெயர்வு, டெல்லி, சாகா பிரசுரம்.

ஆசியாவில் தொழிலாளர் புலப்பெயர்வு; புலப்பெயர் தொழிலாளர்களது பாதுகாப்பு, உதவிச் சேவைகளும் அபிவிருத்தியின் பயன்களை மேம்படுத்தலும் (2005). புலப்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு.

லக்ஷ்மன் W. D. b. சில்வா, A. நவ al (1993), புலப்பெயர் பண அனுப்பீடுகள் அபிவிருத்தி நிதியிடலுக்கான ஓர் மூலம் இலங்கை ஆய்வு. ILO - ARTEP இற்காக தயாரிக்கப்படட அறிக்கை, கொழும்பு, இலங்கை

லொட் விக் A (1990), ஐ. நா. சமவாயச் சூழமைவில் இலங்கை புலம் பெயர் தொழிலாளர்களது வாக்குரிமை தொடர்பான ஆய்வு 1990 மற்றும தற்போதைய தேர்தல் சட்டகங்கள்.

புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள எதிர்கொண்ட பிரச்சினைகள் சிங்கப்பூர் (2005) மனித உரிமைகள் காப்பக அறிக்கை 17 ஆம் பகுதி இல. 10 கி.

புலப்பெயர் பெண் தொழிலாளாகள், இலங்கை : தேசிய மனித உரிமைகள் 2000 (1999 சனவரி முதல் டிசெம்பர் வரை)

நீசான் J. & ஸ்கிபல் (Niessen J & Schibel 2007) கொள்கை வகுப்பாளர்கள், நடைமுறைப்படுத்துநர்களை ஒருங்கிணைப்பீட்டிற்கான (மின்னியல் வழங்கல்) ஐரோப்பிய உத்தியோகபூர்வ வெளியீட்டு அலுவலகம், ஐரோக்கிய ஆணைக் குழு லக்சம்பேர்க்.

பெருந்தோட்டத்துறை பெண்கள், சிறுவர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பான ஆரம்பகட்ட அறிக்கை: இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், ஆசிய அமெரிக்க பிரி லேபர் நிறுவனத்துடன் (இலங்கை) இணைத்து மேற்கொண்ட ஆய்வு (1997).

பெரேரா எம். (1997) "தொழில் புலப்பெயர்வு தொடர்பான ஆய்வுகள், இலங்கையில் அண்மைக்கால கண்டறிதல்கள்" வெளிநாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்புகின்ற நாடுகளின் அதிகாரிகளுடனான பிராந்தியக் கூட்டம், இலங்கை : வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் அமெரிக்க பிரி லேபர் நிறுவகம், கொழும்பு.

ரணராஜா S. 2005, வெளிநாட்டு வேலைக்காக புலப்பெயர்தல்களும் கண்ணியமான தொழில் அம்சங்களும் (இலங்கையில் கண்ணியமான வேலைக்கன தேசிய செயற்றிட்டததை வகுப்பதற்கான தயார்நிலை பின்புல ஆவணம்) ச.தொ.ச., இலங்கை.

ஐ. அ. கி. - ச.தொ.ச. கல்ப் ஒன்றிய விதப்புரைகள் (அபுதாபி ஒன்றியம்) தற்காலிக ஒப்பந்த தொழில் (2008 சனவரி)

குவைத்திற்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் கற்கை விஜயமொன்றை மேற்கொண்ட தூதுக்குழுவின் அறிக்கை (1798 செத்தெம்பர் 20 முதல் செத்தெம்பர் 30 வரை)

சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் புலப்பெயர் தொழிலாளர்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நியாயபூர்வமான வழிமுறைகள் தொடர்பான தீர்மானம் 2004, ஜூன்.

ரொட்ரிகோ F.&. ஜயதிஸ்ச R.A. (1989) கல்பில் தொழில் புலப்பெயர்வுகளின் பயன்களை அதிகரித்தல் : இலங்கை" ஆகிய தொழில் புலப்பெயர்வுகளின் பொருளாதார தாக்கம் தொடர்பான ஆய்வு, நியு டெல்லி, ILO-ARTEP.

சாஹ், நஷ்ரா எம். (2008), எண்ணெய் வளமிக்க வளைகுடாவின் அண்மைக்கால தொழிலாளர் குடிவரவுக் கொள்கைகள் : இவை எந்தளவிற்கு வினைத்திறன்மிக்கதாக காணப்படுகிறது? ஆகிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான ச.தொ. அ. பிராந்திய அலுவலகம், தொழில் புலப்பெயர்வு ஆளுகைத் தொடர்பான ஆசியப் பிராந்திய நிகழ்ச்சித்திட்டம், பேங்கொக்.

ஆசியா, பசுபிக் பிராந்தியங்களில் சமூக மனித விஞ்ஞான கற்கைகளால், RUSHAP தொடர் தொடர்பான விளக்கமான குறிப்புகளும் அவ்வப்போதைய ஆகிய தொழிளாளர்கள்: நான்கு நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டு ஆய்வு. யுனெஸ்கோ பிராந்திய அலுவலகம், பேங்கொக். 1986

புலப்பெயர்வு அபிவிருத்தி தொடர்பான சர்வதேச ஒன்றியம், தொகுப்பறிக்கை, முதல் கூட்டம் பிரேசல்ஸ், 2009 ஜூலை 9-11.

அபிவிருத்திக்கான பத்தாண்டுத் திட்டம் (2006) தொழில் உறவுகள் வெளிநாடடு வேலைவாய்ப்பு அமைச்சு - கொழும்பு இலங்கை.

இலங்கையில் தேசிய தொழிலாளர் புலப்பெயர்வு கொள்கைத் தொடர்பான செயற்பரப்பெல்லை.

தொழிலாளர் புலப்பெயர்வுகள் வீடுகளில் ஏற்படுத்துகின்ற தாக்கம் ஏழு ஆசிய நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டு ஆய்வு. கொட்பிறே குணதிலக (Ed) 1992. அரேபிய நாடுகளுக்கான ஆசிய தொழிளாளர்கள் புலப்பெயர்வுகள் தொடர்பான மூன்றாம் பாகம். ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம்.

வீட்டு உதவியாளர்கள் துறை, காரணிகள், பொறிமுறைகள், பின்விளைவுகள், பெண்கள், புலப்பெயர்ந்த தொடர்பான சர்வதேச திட்டமிடல் கூட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சில ஆவணங்கள், குயூசோன் நகரம், பிலிப்பைன்ஸ் 1987 நவெம்பர் 30 - டிசம்பர் 5. ஆசிய பசுபிக் அபிவிருத்தி நிலையம், கோலாலம்பூர் - 1989.

சர்வதேச பொருளாதார நிலைமைகள், உலக வங்கி GC 1 M (2005) நாடுகளுக்கிடையிலான புலப்பெயர்தல், செயற்பாட்டிற்கான புதிய நெறிப்படுத்தல்கள், சர்வதேச புலப்பெயர்வுத் தொடர்பான பூகோள ஆணைக்குழு அறிக்கை, ஜெனிவா.

"தொலைத்தூர குரல்களை ஒன்று சேர்த்தல்" சிவில் சமூகம் என்ற முறையில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களது ஒருமித்தக் குரல். சகல விதமான பாரபட்சங்களுக்கும் இனவாதத்திற்கும் எதிரான சர்வதேச அமைப்பின் தலைவர் நிமல்கா பெர்ணான்டோ ஆற்றிய தலைமையுரை. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பாக பிராந்திய செயலமர்வு. 2001 டிசம்பர் 19-21, கடடுநாயக்கா, இலங்கை.

உயன்கொட, B.D.R. (1997) "புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை தூதுவராலயங்களின் வகிபாகம்" - புலம்பெயர் பெண் தொழிலாளர்கள் தொடர்பாக சர்வதேச மாநாட்டிலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் - கொழும்பு, சர்வதேச தொழிலாளர்கள் ஒற்றுமைக்கான அமெரிக்க நிலையம் - கொழும்பு.

வய்ரா, நிஷா (2007) வீட்டிற்க்கு வருகின்ற பூகோளமயமாக்கல் : புலம்பெயர்ந்த உள்நாட்டு தொழிலாளர்களது உரிமைகளைப பாதுகாத்தல். மனித உரிமைகள் காப்பக அறிக்கை, நியுயோர்க்.

விக்கிரமசேகர, பியசிறி (2006), பூகோளமயமாக்கல், சாவதேச தொழிலாளர் புலம்பெயர்வுகளும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களது உரிமைகளும், சர்வதேச தொழிலாளர் அலுவலகம், ஜெனிவா.

புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளும் அவர்களது தேவைகளும் (2000), 2000 ஜுலை 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை. ஆவணத் தொடர் இல. 68, பெண்கள் ஆய்வு மையம் (CENWOR) இலங்கை.

புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள் (1999), 1999 மே 20 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை. ஆவணத் தொடர் இல. 64, பெண்கள் ஆய்வு மையம் இலங்கை.

புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள் (2000), 2000 மே 20 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அறிக்கை. பெண்கள் ஆய்வு மையம் (CENWOR), கொழும்பு 07.

புலம்பெயர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள், 1999 மே 20 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை. UNIFEM இனால் நிதியிடப்பட்டது. பெண்கள் ஆய்வு மையம்.

யாபா, லலன்கா சாந்தி (1995). இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தும் - சர்வதேச தொழில் புலப்பெயர்வுகள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளல் நடைமுறைகள்.

பின்னிணைப்பு 5

# முத்தரப்பு வழிப்படுத்தும் குழு உறுப்பினர்கள்

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல
வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சர்

திரு. சுனில் 5. சிறிசேன
செயலாளர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு

திரு. கிங்ஸ்லி ரணவக
தவிசாளர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்.

திரு. உபாலி அத்துகோரளை
சிரேஷ்ட உதவிச் செயலாளர் வெளிநாட்டு தொடர்புகள் தொழில் உறவுகள் மனிதவலு அமைச்சு.

திரு. சுகந்த கமலத்
செயலாளர், நீதி சட்ட மறுசீரமைப்ப அமைச்சர்.

திரு. எம். மஹ்ரூப்
மேலதிக செயலாளர், கே. வெளிவிவகார அமைச்சு.

திரு. பி. பி. அபேகோன்
குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர்.

திரு. எச். எம். குணசேகர,
மேலதிக பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்.

Ms. P. K. A. D. டி சில்வா
பிரதி பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்

திருமதி காந்தி குணதிலக
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
சிறுவர் விருத்தி பெண்கள் வலுவூட்டுகை அமைச்சு

திரு. ஜானக ஜயலத்
பணிப்பாளர்/ தகவல் முறைமைகள்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

திரு. ரவி பீரிஸ்
பணிப்பாளர் நாயகம், எம் லயர் பெடரேஷன் ஒப் சிலோன்

திரு. டி. எம். ஆர். ராஷ்டீன்
பொதுச் செயலாளர்
நெஷனல் எசோசியேசன் போ டிரேட் யூனியன் ரிசேச் ரூ எட்யூசேஷன் (National Association for Trade Union Research & Education)

டாக்டர் D. வீரசிங்க,
பணிப்பாளர், பொருளியல் ஆய்வுப் பிரிவு
மத்திய வங்கி.

திரு. லெஸ்லி தேவேந்திர
பொதுச் செயலாளர், ஸ்ரீ லங்காத நிதகஸ் சேவா சங்கமய

பேராசிரியர் சிறி ஹெட்டிகே
சமூகவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம்

திரு. சஹீட்
தவிசாளர்.

திரு. சுராஜ் டன்தெனிய
அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் அமைப்பு.

ஆலோசகர்கள்

பேராசிரியர் சிறி ஹெட்டிகே
சமூகவியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

டாக்டர் மார்கஸ் மேயர்
சமூகக் கொள்கை பகுப்பாய்வு கற்கை நிலையம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

பின்னிணைப்பு 6

# செயற்படு குழு உறுப்பினர்கள்

செயற்படு குழு உறுப்பினர்கள் 1 - ஆட்சி

1. டாக்டர். சேபாலி கொட்டகொட, விமன் அன்ட் மீடியா கெலக்டிவ், 19, வெலிக்கடவத்த வீதி, ராஜகிரிய.
2. Ms. நிமல்கா பெர்ணான்டோ, IMADR/ மதர்ஸ் & டோட்டர்ஸ் ஒப் லங்கா, 19, 1/1, ஸ்ரீ தம்மா மாவத்தை கொழும்பு 10.
3. Ms. காந்தி யாப்பா, 94, 4 வது ஒழுங்கை, மொடல் டவுன், ரத்மலானை.
4. Ms. பவானி பொன்சேகா, மாற்றுக்கொள்கைக்கான நிலையம், 24/2, 28 வது ஒழுங்கை, ஓப் பிளவர் வீதி, கொழும்பு 3.
5. திரு. எஸ்.பி. சமரநாயக்க, புலம்பெயர் சேவை நிலையம், NWC புலம்பெயர் நிலையம், 10 கவுன்ஸில் லேன், தெஹிவளை.
6. திரு. ரவி பீரிஸ், பணிப்பாளர் நாயகம், எம்ளயர்ஸ் பெடரெஷன் ஒப் சிலோன், 385 J3, பழைய கோட்டை வீதி, ராஜகிரிய.
7. திரு. ராஜித விஜேவீர, உலக வங்கி, 73/5 காலி வீதி, கொழும்பு 3.
8. திரு. டபிள்யூ. எம். பி. அபோன்சோ, தலைவர், ALFFEA, & ஜனாப். எம்.பைசர் மக்கீன், செயலாளர், ALFEA, 69 மாளிகாவத்தை வீதி, கொழும்பு 10

செயற்படு குழு உறுப்பினர்கள் 2 - புலம்பெயர்ந்த தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாத்து வலுவூட்டல்.

1. திரு. எல்.கே.றுகுணுகே, பிரதிப் பொது முகாமையாளர் (வெளிநாட்டுத் தொடர்புகள், SLBFE, 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்ல)
2. Ms. பிரீதி சகலசூரிய, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, 330 தலவத்துகொட வீதி, மாதிவல, ஸ்ரீ ஜயவர்தன புர, பத்தரமுல்ல.
3. Ms. பத்மினி ரத்நாயக்க, மேலதிக செயலாளர், தொழில் உறவுகள் மனிதவலு அமைச்சு, தொழில் செயலகம், கொழும்பு 5.
4. சகோதரி. இமாகுலேட், ACTFORM வெல்கம் ஹவுஸ், 174, அல்விஸ் அவன்யூ, காசல் வீதி, கொழும்பு 8
5. திரு. ஜெராட் லொட்விக், தேசிய தொழிலாளர் காங்கிரஸ் 10, கவுன்சில் லேன், தெஹிவளை.

செயற்படு குழு உறுப்பினர்கள் 3 - புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தி.

1. பேராசிரியர் இந்திரலால் டி சில்வா, பிறப்பு இறப்புப் பற்றிய புள்ளிவிபர ஆய்வு சிரேஷ்ட பேராசிரியர் (தலைவர்), பிறப்பு இறப்புப் பற்றிய புள்ளிவிபர திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு 3.
2. திரு. மங்கள ரன்தெனிய, சமூகவியலாளர் SLBFE, 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்ல.
3. பேராசிரியர் ஸ்வர்ணா ஜயவீர, சென்டர் போ விமன் ரிசேர்ச், 225/4, கிருள வீதி, கொழும்பு
4. Ms. வலயா பெரேரா, ACTFORM, 174, அல்விஸ் அவன்யூ, காசல் வீதி, கொழும்பு 8.
5. Ms. குமாரி வித்தாரன, ACILS, 9, கின்றொஸ் அவன்யூ, கொழும்பு 4.
6. Ms. லீலங்கி வனசுந்தர, சென்டர் போ விமன் ரிசேச் 225/4, கிருள வீதி, கொழும்பு.
7. Ms. ஜீவனி ஜயசிங்ஹ, ஐ.ஓ.எம். 24 பொலிஸ் பார்க் அவன்யூ, கொழும்பு 5.
8. திரு. என்ரூ சாமுஏல், சமூக அபிவிருத்தி சேவைகள், காசல் அவன்யூ, கொழும்பு.